# சிவன் ஒளி



செய்தி மடல்

அக்டோபர் -2003



## සිවන් ඔළි

පුවත් සඟරාව

## SIVAN OLI

NEWS LETTER




"...If the Pandava brothers were given 5 villages, the great war Mahabaratha may not have taken place. It may have been the faith that it didn't happen so. There may be a comparison here in Sri Lanka but what we have to look at it is how we bring this to an end. The great battle Gurushestra lasted only 18 days and was conclusive, but the conflict here has gone for 20 years, but inconclusive and have destroyed everyone of us..."

- Hon. Prime Minister
Mr. Ranil Wickramasinghe

"...இந்துசமயம் அஹிம்சை நெறியினை தனது அடிப்படை நெறியாகக் கொண்டது. அந்தவகையில் ஈழத்துச் சைவர்களும் அறநெறியினை மிகவும் ஈடுபாட்டுடன் கடைப்பிடிப்பவர்கள். வன்முறைக் கலாசாரம் என்பது அவர்களுக்கு அந்நியமானதொன்று. எனினும் துரதிர்ஷ்டவசமாக நமது இளைஞர்கள் போராளிகளாக மாறவேண்டிய சூழல் ஏற்பட்டது. அவர்கள் இயல்பிலேயே வன்முறையாளர்களல்ல. அவர்கள் கொன்றன்ன இன்னா செய்யாமை நெறிப்பட்ட கலாசாரத்தில் வாழ்ந்தவர்கள்..."


- மாண்புமிகு அமைச்சர்
தியாகராஜா மகேஸ்வரன் அவர்கள்



இந்து சமய விவகார அலுவல்கள் அமைச்சு

හින්දු ආගමික කටයුතු පිළිබඳ අමාත්‍යාංශය

Ministry of Hindu Religious Affairs



உ

குருபாதம்

# நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம்

ஸ்தாபகர்: ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாத தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள்.
குருமஹா சந்நிதானம் ஆதி முதல்வர்.

ஆதீன முதல்வர்: ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள்
இரண்டாவது குருமஹா சந்நிதானம்.

பருத்தித்துறை வீதி, நல்லூர், யாழ்ப்பாணம், இலங்கை.


தொலைபேசி: 021 - 222 2870

13../10../2003...

அன்புசால் பெருந்தகையீர்,

இந்து சமய விவகார அலுவல்கள் அமைச்சினால் "சிவனொளி" எனும் செய்திமடல் வெளியிடப்படுவதனையிட்டு மகிழ்ச்சியடைகின்றோம். இந்து சமய விவகார அலுவல்கள் அமைச்சு செயற்படுத்தும் பணித்திட்டங்கள் தொடர்பான விடயங்களை பொது மக்களுக்கு விளக்கும் முகமாக இச்செய்திமடல் வெளிவருவது இத்திட்டங்களினால் பயனுறும் அனைவருக்கும் நன்மையயக்கும் விடயமாகும். தர்மம் குன்றி அதர்மம் தலைதூக்கும் போது தர்மத்தைக் காக்கவும் அதர்மத்தை அழிக்கவும் யுகந்தோறும் அவதரிக்கும் கிஷ்ணபகவானால் நரகாசூரனாகிய அதர்மத்தை அழித்து உலகிற்கு ஒளி கொடுத்த தீபாவளி நன்னாளில் இலங்கைவாழ் இந்துக்களுக்கு ஒளிமிகு திட்டங்களை செயற்படத்தி வரும் இந்து சமய விவகார அமைச்சின் "சிவனொளி" செய்தி மடல் வெளிவருவது அனைவரும் வரவேற்கத்தக்கதொன்றாகும். இம்மலரானது தொடர்ந்தும் சிறந்த முறையில் வெளிவரவும், இம்மலரின் இதழாசிரியர்கள்,மலர்க்குழுவினர் அனைவருக்கும் இறைவனின் ஆசிகிடைக்கப்பிரார்த்திக்கின்றோம். இப்பணியினை நெறிப்படுத்தி நடாத்தும் அமைச்சர்,அமைச்சு ப்பணியாளர்களையும் இறைவன் ஆசீர்வதிப்பானக. இச்செய்தி மடலை அனைவரும் பெற்றுப் படித்துப் பயன்பெறுவோமாக.

"என்றும் வேண்டும் இன்ப அன்பு"
இரண்டாவது குருமஹாசந்நிதானம்
ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக
ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்



**RAMAKRISHNA MISSION**
(Ceylon Branch)
40, Ramakrishna Road, Colombo 6.

*Phone - 588253 & 075 513805*
*Email - rkmcey@eureka.lk*
*rkmlnka@lanka.ccom.lk*

## வாழ்த்துச் செய்தி

இந்து சமய விவகார அலுவல்கள் அமைச்சு, எதிர்வரும் தீபாவளி தினத்தன்று வெளியிடவிருக்கும் "சிவனொளி" செய்தி மடலுக்கு இவ் வாழ்த்துச் செய்தியை வழங்குவதில் பெருமகிழ்ச்சியடைகிறோம்.

எல்லோர் உள்ளத்திலும் இறைவன் ஞானதீபமாக வீற்றிருக்கிறான். ஆனால் அஞ்ஞானத்தினால் அந்த ஞானதீபம் மறைக்கப்பட்டிருக்கிறது என்கிறது ஸ்ரீமத் பகவத்கீதை. அந்த அஞ்ஞானத்தை அவன்தான் நீக்கியருள வேண்டும். அதற்காக இறைவனது திருவருளைப் பிரார்த்திக்க வேண்டும். தீபாவளித் திருநாளன்று ஏற்றப்படும் திருவிளக்கு, மெய்ஞ்ஞான ஒளியை வேண்டி மேற்கொள்ளப்படும் அத்தகைய ஒரு வழிபாடு எனலாம்.

இந்து சமய விவகார அலுவல்கள் அமைச்சு, இந்நாட்டில் இந்து சமயம் தழைத்தோங்க பல்வேறு பணிகளை மேற்கொண்டு வருகிறது. அவையனைத்தும் வெற்றியுடன் அமைய இறைவனது திருவருளை வேண்டுகிறோம்.

இவ்வினிய தீபாவளித் திருநாளன்று கௌரவ அமைச்சர் தி. மகேஸ்வரன் அவர்களுக்கும், அவ்வமைச்சின் ஏனைய அதிகாரிகளுக்கும் எங்கள் இனிய நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்வதில் பெருமகிழ்ச்சியடைகிறோம்.

சுவாமி ஆத்மகனானந்தா
(சுவாமி ஆத்மகனானந்தா)
11/10/2003



# சிவன் ஒளி

செய்திமடல் – அக்டோபர், 2003

தொலைநகல் 2554803

**தொலைபேசி**

அமைச்சர் 2554801
2554802
செயலாளர் 2554804
பொது 2552641

இந்து சமய விவகார அலுவல்கள் அமைச்சு
248-2/1, காலி வீதி,
கொழும்பு 04



| | | | |
|---|---|---|---|
| மலர் - 01 | இதழ் - 01 | மாதம் ஐப்பசி | ஆண்டு - 2003 |



## எண்ணம்



சைவ சமயத்தில் மனிதப் பிறவி எடுப்பதற்குப் பூர்வ புண்ணியம் செய்திருக்கவேண்டும். திருமூலரால் சிவபூமி எனப் போற்றப்பட்டதும் சிவபக்தனாகிய இராவணேசன் அரசு செய்ததுமான ஈழத் திருநாட்டில் சைவ சமயத்தவர்களாகப் பிறக்கக் கிடைத்தமை பெரும் பாக்கியமாகும்.

வாழ்வில் எல்லா நலன்களும் இனிதுய்யப் பெற்று நீடுழி வாழ எமது வழிபடு கடவுளாகிய அருள்மிகு தில்லைபெருங்கூத்தன் பொற்கமலத் திருப்பாதங்களைப் பணிந்து வணங்கி இந்து சமய விவகார அலுவல்கள் அமைச்சு வெளியிடும் சிவப்பணி செய்தி மடலாம் "சிவன் ஒளி" அனைவர் கரங்களிலும் தவழ இறையருளை வேண்டுகின்றோம்.

இந்து சமய விவகார அலுவல்கள் அமைச்சு கடந்த 2001ஆம் ஆண்டு தேர்தலின் பின்பு உருவானது. இரண்டு ஆண்டுகள் நிறைவினைக் கொண்டாடும் நிலையில் தீபாவளித் திருநாளைத் தேசிய விழாவாகக் கொண்டாட மாண்புமிகு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அவர்களினால் கோரப்பட்டிருப்பது இவ்வமைச்சின் இரண்டாண்டு சாதனைகளில் ஒன்றாகும்.

இரண்டாண்டுகளில் இந்து சமய விவகார அலுவல்கள் அமைச்சினால் முன்னெடுத்துச் செல்லப்பட்ட செயற்றிட்டங்களும் அதன்மூலம் கிடைத்த பலாபலன்களும் அளப்பரியன என்றே கூறலாம். 1982ஆம் ஆண்டு முதன் முறையாக உலக இந்து மாநாடு இலங்கையில் நடைபெற்றது. 20 ஆண்டுகளின் பின்பு 2ஆவது உலக இந்து மாநாட்டை இலங்கையில் நடத்தியதுடன் நின்றுவிடாது உலக இந்துக்களை மீண்டும் இணைத்த பெருமை இந்து சமய விவகார அலுவல்கள் அமைச்சர் மாண்புமிகு தியாகராஜா மகேஸ்வரன் அவர்களையே சாரும்.

இளைஞராக, வயதில் குறைந்த பாராளுமன்ற உறுப்பினராக யாழ் மாவட்டத்திலிருந்து ஐக்கிய தேசியக் கட்சி மூலமாகத் தெரிவுசெய்யப்பட்ட தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினரும் அமைச்சரும்

---

**இந்துவாக வாழ்வோம்! இந்து தர்மம் காப்போம்!**

இவரே ஆகும். தமிழ் மக்களுக்கென இந்து சமய விவகார அலுவல்கள் அமைச்சே ஒதுக்கப்பட்டுள்ளது. இந்த அமைச்சின் மூலம் இயன்றவரை தமிழ் மக்களுக்குச் சேவையாற்றவேண்டுமென்ற முனைப்புடன் அமைச்சைப் பொறுப்பேற்றார்.

இரண்டாண்டுகள் நிறைவுறும் இத் தறுவாயில் அமைச்சினால் மேற்கொள்ளப்பட்ட செயற்றிட்டங்களும், முன்னெடுப்புகளும் அளப்பரியன. வடக்கு, கிழக்கில் அழிவுற்ற ஆலயங்களைப் புனரமைப்பு செய்தல் முதல், மக்களின் தேவைகளை உணர்ந்து அவைகளை பாராளுமன்றத்தில் சுட்டிக்காட்டுதல் வரை எடுத்தாளப்பட்ட விடயங்கள் குறிப்பிடத்தக்கவை.

வடக்கு கிழக்கில் கடந்த 20 வருடங்களாக நடைபெற்ற யுத்தத்தினால் அழிவுற்ற ஆலயங்கள் யாவும் உரியமுறையில் திருத்தப்படாத நிலையில் உள்ளன. பாதுகாப்பு வலயங்கள் என்ற போர்வையில் மக்கள் வெளியேற்றப்பட்டு அகதிகளாக்கப்பட்டுள்ளனர். அவர்களை மீளக் குடியேற்றுவதில் உள்ள காலதாமதத்தால் மக்களின் மீளக் குடியேற்றம் யாழ் மாவட்டத்தில் மந்தகதியில் இருக்கும் நிலை அரசுக்கு இவைகளைச் சுட்டிக்காட்டி மக்கள் அவலம் போக்க முனைப்புடன் இந்து சமய விவகார அலுவல்கள் அமைச்சு செயற்பட்டு வருகின்றது என்றே கூறலாம்.

அமைச்சின் கீழியங்கும் இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம், பனை அபிவிருத்திச் சபை, வடகடல் நிறுவனம் முதலியன அபிவிருத்தி நடவடிக்கைகளை முன்னெடுத்துச் செல்வது இதன் பணிகளில் ஒன்றாகவுள்ளது. அரசின் தவறுகளைச் சுட்டிக்காட்டத் தவறாத ஒரு தமிழ் அமைச்சராகவும் செயற்பட்டு வருவது தமிழ் மக்களை வலுப்பெறச் செய்கின்றது.

உலக இந்து மாநாட்டின் மூலம் இலங்கையில் விழிப்புணர்வை ஏற்படுத்தியதுடன் இம் மாநாட்டிற்கான முத்திரையையும் வெளியிடச் செய்த பெருமை கௌரவ அமைச்சரைச் சாரும். தற்போது தீபாவளித் திருநாளை தேசிய விழாவாகக் கொண்டாடுவதற்கு வழிசமைத்த பெருமை மட்டுமல்ல, இத்தேசிய விழாவையொட்டி தபால் முத்திரை ஒன்றையும் வெளியிடுவதற்கான வழிவகைகளைச் செய்து தமிழ் மக்களின் பாரம்பரிய தீபாவளித் திருநாள் இலங்கையில் அரசின் அனுசரணையுடன் நடைபெறுவதற்கான முனைப்பை ஏற்படுத்திய செயல் வீரராகத் திகழ்கின்றார்.

காலம் இரண்டாண்டுதான்; ஆனால் கனிந்தவைகள் அளப்பரியன. வடக்கு, கிழக்கு, மலைநாடு உட்பட நூற்றுக்கணக்கான ஆலயங்கள் உதவிகளைப் பெற்று மகா கும்பாபிஷேகங்களையும் நடத்தி புனருத்தாரணங்களையும் செய்துள்ளன. அநாதைச் சிறுவர் இல்லங்கள், வலது குறைந்த நிறுவனங்கள் கௌரவ அமைச்சர் அவர்களினால் உதவிகளைப் பெற்றுள்ளன. ஆலயங்களின் குருமார்கள் மதிக்கப்பட்டு கௌரவிக்கப்பட்டுள்ளனர். ஆலயங்களின் தேவையறிந்து வாகன வசதிகள் செய்து கொடுக்கப்பட்டுள்ளன. அறநெறிப் பாடசாலைகள், புத்தூக்கம் பெற்றுள்ளன. அறநெறிப் பாடசாலையில் கல்வி பயிலும் மாணவர்களுக்குச் சீருடைகள் வழங்குவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

ஆலயங்களின் தேவைகருதி பூசைப் பொருட்கள் வழங்கப்பட்டுள்ளன. இதனால் பல ஆலயங்கள் தங்கள் குறையை நிவர்த்தி செய்து கொள்ளக்கூடிய வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. இப்படியான செயற்பாடுகளினால் இந்து சமய விவகார அலுவல்கள் அமைச்சு இரண்டாண்டுகளில் பல சாதனைகளைப் படைத்து வெற்றி கண்டு வருகின்றது.

குறித்த சாதனைகளின் வெளிப்பாடாகவும் தீபாவளி தேசிய விழாவின் ஞாபகார்த்தமாகவும் வெளிவருவது 'சிவன் ஒளி' எனும் அமைச்சு செய்தி வெளியீடாகும். இந்தச் செய்தி வெளியீட்டின் மூலம் அமைச்சின் சாதனைகளும், செயற்பாடுகளும் மக்கள் முன் வெளிக்கொணரப்படுகின்றன. இந்த வெளிக்கொணர்வு அமைச்சுச் செயல்திறனை ஊக்கப்படுத்தவும் இனிவரும் காலத்தில் நல்ல செயற்றிட்டங்களை நடைமுறைப்படுத்தவும், வலிமை அளிக்கும் என எண்ணுகின்றோம்.

* * *



## இந்து சமய விவகார அலுவல்கள் அமைச்சர் மாண்புமிகு தியாகராஜா மகேஸ்வரன் அவர்களின் ஆசிச்செய்தி

இந்து சமயத்தின் தொன்மையும், அதன் தெளிவும் மனித வாழ்வுக்கு ஒளியூட்டி நிற்பவையாகும். இந்து மதத்தில் செறிந்துள்ள விழாக்களும், விரதங்களும் தத்துவங்களையும், மனித வாழ்வின் இலட்சியங்களையும் எடுத்துக் கூறி நிற்பன.

தனித்துவம் கொண்ட தீபாவளித் திருநாளும் இந்துக்களின் சிறப்புமிகு பண்டிகைகளில் ஒன்றாகும். அதர்மம் அழிந்து தர்மம் நிலைத்தோங்க வழியமைத்த திருநாள் தீபாவளித் திருநாள். இருப்பவர்கள் இல்லாதோர்க்கு வழங்கி உண்டு களித்து மகிழ்ந்திடும் இத் தீபத் திருநாளைத் தேசிய ரீதியில் கொண்டாடுவதற்கேற்ற விதத்தில் வழிசமைத்துக் கொடுத்த மாண்புமிகு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அவர்களுக்கு மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

தேசிய ரீதியில் நடைபெறும் தீபாவளித் திருநாளையொட்டி எனது அமைச்சு மூலம் வெளியிடப்படும் "சிவன் ஒளி" செய்தி மடலுக்கு எனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்வதில் மிகவும் மனமகிழ்ச்சியடைகின்றேன்.

"சிவன் ஒளி" அமைச்சின் செயற்பாடுகளையும், எதிர்காலத் திட்டங்களையும் உள்ளடக்கிய செய்தி இதழாக வெளிவருவது இக் காலகட்டத்தில் மிகவும் பொருத்தமானது எனக் கருதுகின்றேன்.

தொடர்ந்து வரும் காலங்களிலும் "சிவன் ஒளி" செய்தி மடல் நல்ல ஆழமான விடயங்களையும், செய்திகளையும் தாங்கி வெளிவரவேண்டும். அப்போதுதான் அமைச்சின் முன்னெடுப்புக்களையும் செயலாக்கங்களையும் இந்து மக்கள் அறிந்து கொள்ளக்கூடிய வாய்ப்பு உண்டாகும்.

இத்தகைய வாய்ப்பை இந்து மக்களுக்கு வழங்குவதில் "சிவன் ஒளி" முன்நிற்கவேண்டும் என்பதே எனது எதிர்பார்ப்பாகும்.

தியாகராஜா மகேஸ்வரன்
இந்து சமய விவகார அலுவல்கள் அமைச்சர்

---

## இந்து சமய விவகார அலுவல்கள் அமைச்சின் செயலாளரின் செய்தி



இலங்கையில் இந்து சமயத் துறையின் மேம்பாட்டுக்கெனத் தனியானதொரு அமைச்சு உருவாக்கப்பட்டு ஏறத்தாழ இரு ஆண்டுகள் நிறைவுபெறுகின்றன. இவ்வமைச்சிற்குப் பொறுப்பான கௌரவ அமைச்சர் தி.மகேஸ்வரன் அவர்களின் வழிகாட்டலின் பேரில் கடந்த இரு ஆண்டுகளுக்குள் பல்வேறு பணித்திட்டங்கள் சிறப்பாகவும், வெற்றிகரமாகவும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

அமைச்சின் கீழியங்கும் நிறுவனங்களான இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம், பனை அபிவிருத்திச் சபை, வடகடல் நிறுவனம் ஆகியன தமக்குரிய செயற்பாடுகளையும், அமைச்சின் புதிய திட்டங்களையும் செயற்படுத்தும் நிறுவனங்களாக உருவாக்கப்பட்டுள்ளன. இந்த ஆண்டு எமது அமைச்சின் உன்னதமான ஒரு நடவடிக்கையாக 2ஆவது உலக இந்து மாநாடு அமைந்தது.


இம்மாநாடு இலங்கையின் இந்து சமயத் துறைக்குப் பேரெழுச்சி தந்ததாக அமைந்ததைப் பலரும் பாராட்டி வாழ்த்தினர். போரினால் பாதிக்கப்பட்ட வடகிழக்கு மாகாணங்கள் உட்பட இலங்கையின் அனைத்துப் பாகங்களையும் சேர்ந்த ஆலயங்களின் புனரமைப்புக்கு அமைச்சு விரிவான திட்டங்களையும் மேற்கொண்டு வருகின்றது. அறநெறிப்பாடசாலைகளின் வளர்ச்சிக்குப் பல்வேறு செயற்றிட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அவ்வாறே பனை அபிவிருத்தித் துறையின் மேம்பாட்டிற்குச் சிறந்த திட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றன.

இவ்வாறான செயல்கள் அனைத்தையும் வெளிப்படுத்தும் அமைச்சின் செய்தி மடலாக "சிவன் ஒளி" என்னும் இம் மடலை வெளியிட்டு வைப்பதில் மிக்க மகிழ்ச்சியடைகின்றோம். இவ்வாண்டு தீபாவளிப் பண்டிகை அரசின் பூரண அனுசரணையோடு தேசிய வைபவமாகக் கொண்டாடப்படும் இன்றைய நன் நாளில் இதனை வெளியிட்டு வைப்பது மிகவும் பொருத்தமானதாகும். இம்மடல் பொது மக்களுக்கு எமது அமைச்சு தொடர்பான தகவல்களைப் பூரணமாக வழங்குமென நம்புகின்றேன்.

க.பரமேஸ்வரன்,
செயலாளர்.

## மாண்புமிகு இந்து சமய விவகார அலுவல்கள் அமைச்சர் தியாகராசா மகேஸ்வரன், பா.உ. அவர்கள் காஞ்சி காமகோடி விஜயம்

கடந்த பெப்ரவரி மாதம் நடுப்பகுதியில் இந்து சமய விவகார அலுவல்கள் அமைச்சர் மாண்புமிகு தியாகராசா மகேஸ்வரன், பா.உ., அவர்கள் தமிழ்நாடு காஞ்சி காமகோடி பீடத்துக்கான தமது விஜயத்தை மேற்கொண்டார். அமைச்சர் தி. மகேஸ்வரன், பா.உ., அவர்களை சங்கர மடத்தின் இளவரசு ஊர்வலமாக அழைத்துக்கொண்டு சங்கரமடத்தின் ஆலயத்துக்கு அழைத்துச்சென்று விஷேச பூசைகள் நடாத்தினார். அங்கு ஜெகத்குரு ஸ்ரீ விஜயேந்திர சரஸ்வதி சங்கராச்சார்ய சுவாமிகள் பொன்னாடை, மலர்மாலை முதலியன அணிவித்து ஆசீர்வாதம் செய்தார். பின்னர் அமைச்சருடன் உரையாடினார். உரையாடும்பொழுது இலங்கை மக்களுக்கு சகல நன்மைகளும் கிடைக்க காஞ்சி காமகோடி பீடத்தின் ஆசீர்வாதம் எப்பொழுதும் உண்டு. உங்கள் பணிகளுக்கு சங்கர மடம் என்றும் தனது ஒத்துழைப்பை வழங்கத் தயாராக உள்ளது.



காஞ்சி சங்கர மடத்தின் கீழ் இயங்கும் வேதாகம பாடசாலையில் அமைச்சருக்கு சிறப்பு நிகழ்ச்சி ஒழுங்குசெய்யப்பட்டது. வேதாகம பாடசாலை மாணவர்களின் பாராயணத்தை தொடர்ந்து அமைச்சர் அங்கு உரையாற்றினார். அவர் தமது உரையில் "எமது நாட்டிலும் முதன்முதலாக எனது அமைச்சின் கீழ் ஓர் வேதாகமக் கல்லூரி ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இங்கு வேதபாராயணம் நிகழ்த்திய மாணவர்களின் செயற்பாடு கண்டு யான் பிரமித்து போயுள்ளேன். அத்தனை சிறப்பாக அவர்களின் உச்சரிப்புக்கள் குரு பயபக்தி ஆகியவற்றைக் காணக்கூடியதாக இருந்தன. நீங்கள் அனைவரும் இலங்கைக்கு விஜயம் மேற்கொள்ள வேண்டும் என கேட்டுக்கொள்கிறேன். அதற்கான சகல ஒத்துழைப்புக்களையும் எனது அமைச்சு வழங்கும்" எனத் தெரிவித்தார்.

தொடர்ந்து, சங்கர மடத்தின் கீழுள்ள சிற்பக் கல்லூரிக்கு விஜயம் செய்த அமைச்சர் தி. மகேஸ்வரன், பா.உ., அவர்கள் அக்கல்லூரியின் அதிபர், விரிவுரையாளர்கள், மாணவர்கள் ஆகியோருடன் மிகநீண்ட நேரம் கலந்துரையாடினர். அவர்களினால் மேற்கொள்ளப்படும் சிற்பங்களையும் அவை செதுக்கப்படும் விதங்களையும் மிகக் கவனமாக கேட்டறிந்துகொண்டார். அங்கு கல்லூரி அதிபருடன் உரையாடும்போது இத்தகைய கல்லூரி ஒன்றை இலங்கை நாட்டில் தமது அமைச்சின் மூலம் ஏற்படுத்தும் நோக்கம் உண்டென்பதையும் வெளிப்படுத்தினார். அதற்கு இங்குள்ள விரிவுரையாளர்களின் உதவியை கோரியபோது அவர்கள் சம்மதம் தெரிவித்தார்கள்.

சங்கர மடத்தினால் நடாத்தப்படும் நவீன முறையிலான அன்னதான மடத்தையும் பார்வையிட்டதுடன் அங்கு உரையாடுகையில் அத்தகையதொரு அன்னதான மடத்தை ஈழத்திலும் அமைக்கும் ஆவல் கொண்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

காஞ்சி காமகோடி மடத்திற்கு அமைச்சர் மேற்கொண்ட விஜயம் அவரது அமைச்சுப் பணிகளில் ஒரு மைல்கல்லாக அமைந்ததெனக் குறிப்பிடலாம்.



# தேசிய தீபாவளி விழா - 23.10.2003

புதிய கதிரேசன் மண்டபம், பம்பலப்பிட்டி

## நிகழ்ச்சிகள்

| | |
|---|---|
| பி.ப. 4.00 மணி | நாதஸ்வர - தவில் மங்கள இசை |
| பி.ப. 4.30 மணி | மங்கள விளக்கேற்றலும் கொடி ஏற்றலும் |
| பி.ப. 4.40 மணி | பூஜை தொடர்ந்து திருமுறை ஓதுதல் |
| பி.ப. 4.55 மணி | ஆசியுரை - சிவஸ்ரீ குஞ்சிதபாதக் குருக்கள் |
| பி.ப. 5.05 மணி | வரவேற்பு நடனம்<br>வெள்ளவத்தை இந்து மகளிர் கல்லூரி |
| பி.ப. 5.15 மணி | தீபாவளி சிறப்புச் சொற்பொழிவு<br>தவத்திரு மருதாசலம் அடிகள்<br>இளவரசு, பேரூர் ஆதீனம், தமிழ்நாடு |
| பி.ப. 5.45 மணி | இந்து மதக்குருமார்களைக் கௌரவித்தல் |
| பி.ப. 6.05 மணி | வரவேற்புரை<br>திரு க. பரமேஸ்வரன்,<br>செயலாளர், இந்து சமய விவகார அலுவல்கள் அமைச்சு |
| பி.ப. 6.10 மணி | தலைமையுரை<br>மாண்புமிகு தியாகராசா மகேஸ்வரன், பா.உ., அவர்கள்<br>இந்து சமய விவகார அலுவல்கள் அமைச்சர் |
| பி.ப. 6.25 மணி | தீபாவளி ஞாபகார்த்த முத்திரை வெளியீடு<br>மாண்புமிகு இம்தியாஸ் பாக்கீர் மாக்கார், பா.உ. அவர்கள்<br>பொதுசன தொடர்பாடல் அமைச்சர் |
| பி.ப. 6.35 மணி | நரகாசுர வதம் : நாடகம்<br>முகத்துவாரம் இந்துக் கல்லூரி |
| பி.ப. 6.50 மணி | பிரதம விருந்தினர் உரை<br>கௌரவ ரணில் விக்கிரமசிங்க அவர்கள்<br>இலங்கையின் பிரதம அமைச்சர் |
| பி.ப. 7.05 மணி | கரகாட்டம்<br>பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரி |
| பி.ப. 7.20 மணி | அமைச்சின் முதல் செய்தி மடல் "சிவன் ஒளி" வெளியீடு |
| பி.ப. 7.30 மணி | வயலின் இசை<br>உலகப் புகழ் தென்னிந்திய வயலினிசை மேதை குன்னக்குடி வைத்தியநாதன் அவர்களும் குழுவினரும் |



ශ්‍රී ලංකා ජනාධිපති
இலங்கை சனாதிபதி
President of Sri Lanka

2 May 2003

**MESSAGE FROM HER EXCELLENCY THE PRESIDENT**
**CHANDRIKA BANDARANAIKE KUMARATUNGA**

I am happy indeed to inaugurate the 2nd World Hindu Conference, which addresses the interests and concerns of the World Hindu Community, including that of Sri Lanka.

I am even more pleased that Sri Lanka is able to host the second World Hindu Conference for we consider Hinduism also as part of our great cultural heritage, as much as Buddhism. We have inherited both these religious traditions from the Indian sub continent.

As we know, the Asian mainland was the cradle of ancient civilizations. Hinduism and Buddhism along with Islam constituted the three main religions bequeathed to the entire mankind by Asia.

During the course of her long history one could see how Sri Lanka was inspired by the main religions to become a truly multi – cultural society. Buddhism and Hinduism have co – existed throughout the past millennia. Over a period of time, our people had learnt to maintain the core values unique to each religion while following shared values common to both religions. This, I must say is the basis for co –existence and national integration.

ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජය
இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு
**Democratic Socialist Republic of Sri Lanka**

On account of their co- existence there has been a considerable degree of assimilation and synthesis. The concept of the four guardian gods is an important component in Sri Lankan Buddhism. Two of them, Skanda and Vishnu, are Hindu gods. In the paintings at the Mahiyangana Temple one of the hallowed shrines of ancient Buddhism there are images of Siva and Vishnu and these paintings are datable to the 11th century. The Temple of Kataragama is a point of convergence for Buddhists and Hindus. In this context, I would like to emphasize that our shared heritage based on co -existence and close interaction could be a source of inspiration for national integration.

Besides, Hinduism and its unique cultural traditions have blended with the local culture to have a deep impact on the Sri Lankan social fabric, its literature, art and religious practices.

In Hinduism there has been a recognition, from ancient times, of the reality of the phenomenon of diversity in matters pertaining to religious belief and practice. The ***Bhagavad gita***, one of the major Hindu religious texts is particularly significant as providing legitimacy for divergent forms of thought and religious practices. The Hindu experience in this respect has a contemporary relevance when there is a persistent effort for finding avenues for holding together societies that are losing their homogeneity on account of rapid changes in consequence of globalization.

In this context, the keynote address at this Conference on " Hinduism and Universal peace" by justice Mohan of India is most appropriate for the occasion. The recognition of the reality of diversity and the principle of co-existence is an essential requisite for sustainable peace.

Ancient Kings of Sri Lanka, many of whom had Brahmin ***purohitas*** at the Royal Court had a clear vision of the complementary nature of Buddhism and Hinduism in social formation and the development of institutions. They had exercised a custodial function in relation to Hinduism too. Up to the end Kotte period, we have heard of " Shadbasha Parameshwara", the scholar monks in our temples, who were versed in many languages. Tamil was one of the languages that were studied in these ***pirivenas***. We consider the Tamil language not only as a means of communication, but also as a depository of knowledge. At this point I would like to say that the Buddha Sasana Commission appointed by Prime Minister S W R D Bandaranaike in its report submitted to the Government, almost fifty years ago recommended that Hinduism also should be supported by the State. The spirit of the recommendations has been accepted and implemented by successive Governments during the post – independence era.

It is a legacy inherited by us and I strongly believe that it should be cherished and protected. In a multi – cultural society, the nation embraces all ethnic groups, we call them nations with their own cultural identities and enjoy the right to political expression within a state which recognizes and gives expression to the collective idea of nation. Let us all strive towards achieving this lofty dream of our people.

I understand that the 2nd World Hindu Conference was convened to revive and propagate Hindu religious values. In my view the principles of Hinduism are aimed at fostering mutual understanding and upholding human rights. It is my fervent hope that the proceedings of the Conference would lead to propagating such values and foster religious and racial harmony amongst all communities in Sri Lanka.

# "We must Uphold the Concept of a Negotiated Settlement"

**REPRODUCED BELOW IS THE INAUGURAL ADDRESS BY HON. PRIME MINISTER MR. RANIL WICKREMASINGHE AT THE 2ND WORLD HINDU CONFERENCE**

I take great pleasure in inaugurating the 2nd World Hindu Conference. A Conference of similar nature took place in Sri Lanka when J.R. Jayawardane was the President. It was organized by the then Minister and my friend Mr. Rajadurai. The Minister for Hindu Affairs Hon. Maheswaran and his Ministry Secretary and Ministry officials have taken great pain to organize this Conference and to ensure its success. I want to thank you much for having organized this Conference and also convey our thanks to the Secretary and the other members of the Ministry. Within a year Hon. Minister has been able to organize this Conference.

After all, Hinduism is the oldest religion that is practiced in Sri Lanka. It has been practiced in this Island as long as it was practiced in India. We all know that Lord Rama on his way back after victory established the great shrine at Munneswaram. A similar place of worship was also established to his brother Ravana, Vipushana, in Kelaniya and is worshiped even today. Hinduism has played a great role in shaping the culture and history of our nation for the civilization of this island not only the time immemorial, not only the time of the dry zones Kingdoms, the Rajarata Kingdoms but later on and what is forgotten is the input, of immigrants into Sri Lanka both to the North and to the South and who served the kingdom of Kotte, which I think also accounts why the great shrine for Pathini, Godess Pathini is there. So these are the connections that are there between Hinduism and the civilization of our country. Both Hinduism and Buddhism accept pluralism and have existed side by side in the country. This establishes the universality of the divine sole. It accepts that various paths were valid to attain spiritual progress. It is this which made co-existence possible in the old days between Hinduism, Buddhism and Jainism.

The old city of Kanchchipura which was also a center for Theravada Buddhism, many Schools of Hinduism and Jainism were linked together. This co-existence was therefore, most part of the time though unfortunately chronicles are written only about warriors and the short period when there were war but there was always co-existence that was seen in the time of King Ellala and of many other kings who ruled the Anuradhapura Kingdom. This was confined not only to South Asia but even into South East Asia. Today you find Hinduism has spread outside South Asia, to Africa, to Europe, to America, to Canada, United States, to the Caribbean Islands, South America, to Australia and the Pacific Islands . It is today universal in that sense. Therefore, I like to recommend to this Conference to look at a structured way in which regularly the Hindus through out the world could gather on Conferences which could be held alternately in the kingdom of Nepal, in India in Sri Lanka, to discuss matters of spiritual concern, relationships and its co-existence with other religions and its application to the 21st century.

The theme of this Conference is Dharma and the Quest for Peace. I think it is very very relevant to those who are in Sri Lanka, who are in Nepal and to many other parts of the world. We meet here at a time when we in Sri Lanka are trying to bring to an end to conflict and bring peace to our country. I don't want to deal with it in length, that is not my intention here except to say that if the Pandava brothers were given 5 villages the great war Mahabaratha may not have taken place. It may have been the faith that it didn't happen so. There may be a comparison here in Sri Lanka but what we have to look at it is how we bring this to an end. The great battle Gurushestra lasted only 18 days and conclusive, but the conflict here

has gone for 20 years, but is inconclusive and have destroyed everyone of us. Today we have embarked on a peace process which is difficult but nevertheless it has traveled down the road. We are meeting at a time when you come to what we call a difficult path. But the peace process cannot be easy it would have been easy long ago. I am heartened by the fact that we are, all parties, have made a commitment not to re-engage in violence and all, political parties whatever the internal differences, uphold the concept of a negotiated settlement acceptable to all communities in Sri Lanka.

We should be able to renounce violence and that was the message that Mahatma Gandhi gave to the world from India. The message on non-violence was the message of the Mahatma. That message on non-violence could be carried out because it was against the British, that it was done because he was a Mahatma and because he based it on a doctrine mainly the Hindu philosophy. The Geetha was his favourite scriptures, but he also read the Bible, other Buddhist works, Islamic works, scriptures as well as other writings and the scriptures of Hinduism. All this was based on the universal message on non-violence but today, we have seen it being practiced in other country. Nelson Mandela has proved that Gandi's message is correct. He was after all, not fighting against the British. He was fighting against the South African white State who was threatened by the Message. He was not a Mahatma. But he followed in the same way and the African National Congress which had taken up arms and it was fighting to take up to arms which fought a battle, finally was able to renounce violence and show to the world a modern state. So all of us here, not one party, must prepare to renounce violence and accept that it is possible by renouncing violence, to go ahead. When we renounce violence and change our minds and to have that final long lasting peace. This is easier said than done. It can't be done that easily. I think it is most appropriate, that this Conference which has the theme Dharma and Quest for peace, brings to bear on its deliberations how do you renounce violence.

I wish this Conference all success.




இலங்கை தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியத்தின்
விருது வழங்கும் வைபவத்தில் மாண்புமிகு
அமைச்சர்

# “போராளிகள் அஹிம்சா மூர்த்திகளாக மாறுவர்”
## உலக இந்து மகாநாட்டில்
## அமைச்சர் மகேஸ்வரன்

சென்ற மே மாதம் 2ஆந் திகதி கொழும்பு பண்டாரநாயக்கா சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்ற 2ஆவது உலக இந்து மகாநாட்டின் தொடக்க விழாவில் இந்து சமய விவகார அலுவல்கள் அமைச்சர் மாண்புமிகு தியாகராஜா மகேஸ்வரன் பா.உ. அவர்கள் ஆற்றிய தலைமையுரை

தேர்தலின் விளைவாக 2001ஆம் ஆண்டின் முடிவிலே தேசிய முன்னணி ஆட்சியதிகாரம் பெற்றதும் இந்து சமய விவகார அலுவல்கள் அமைச்சினை மீண்டும் உருவாக்கி அதற்கான பொறுப்புள்ள அமைச்சராக என்னை நியமித்தது. போரின் கோரத்தினால், குறிப்பாக வட கிழக்கிலே சீர் குலைந்துவிட்ட இந்து சமுதாயத்தைப் புனரமைப்பதற்கான ஒரு சூழ்நிலையினை ஏற்படுத்துவதற்கு இரண்டாவது உலக இந்து மாநாட்டை நடத்துவது அவசியமானது என்பதை உணர்ந்தேன். சென்ற வருடம் ஏப்ரல் 27ஆந் திகதி ஆலோசனைக் கூட்டமொன்றைக் கூட்டியபொழுது எனது கருத்து எல்லோராலும் ஒப்புக்கொள்ளப்பட்டது.

மகாநாட்டை நடத்துவதற்கு வேண்டிய ஒழுங்குகளைச் செய்வதற்கு ஒரு வழிகாட்டற் குழுவும் பதினொரு நிறைவேற்றுக் குழுக்களும் அமைக்கப்பட்டன. அவை மேற்கொண்ட நடவடிக்கைகளினதும் பணிகளினதும் விளைவாகவே இம் மகாநாடு நடைபெறுகின்றது. அவற்றின் பணிகள் மகாநாட்டுச் செயலகத்தினால் ஒருங்கிணைக்கப்பட்டன.

இலங்கையிலுள்ள பிரதான இந்து சமய நிறுவனங்களான அகில இலங்கை இந்து மாமன்றம், விவேகானந்த சபை, இராமகிருஷ்ண மிஷன், இலங்கை இந்துப் பேரவை முதலியன ஆரம்பத்திலிருந்து எமக்குப் பக்கபலமாகவிருந்து பேராதரவு புரிந்து வந்துள்ளன. மகாநாடு தொடர்பான பொறுப்புக்களையும் அவை மேற்கொண்டன. கொழும்பிலுள்ள பிரபலமான தேவஸ்தானங்களின் அறங்காவலர்களும் எமக்கு அனுசரணையாகவிருந்து பேருதவிகளைச் செய்த மேதகு ஜனாதிபதி அவர்களும்இலங்கை அரசாங்கமும் இம் மகாநாட்டில் மிகுந்த அக்கறை கொண்டுள்ளதோடு அனுசரணைகள் பலவற்றையும் புரிந்துள்ளனர்.

இம் மகாநாட்டிலே பல புதுமையான அம்சங்கள் இடம்பெறுகின்றன. அதன் நினைவாக தபால் திணைக்களம் 4 ரூபாய் 50 சதம் பெறுமதியான முத்திரை ஒன்றை வெளியிட்டுச் சிறப்புச் செய்கின்றது. அம் முத்திரையில் மகாநாட்டு இலச்சினை பொறிக்கப்பட்டுள்ளது. சிறப்பு மலரொன்று தமிழிலும் ஆங்கிலத்திலுமென இரு தொகுதிகளாக வெளிவருகின்றது. அவை இந்து சமயம், இந்து கலாசாரம், இந்து சமுதாயம் என்பன பற்றிய அறிவுக் களஞ்சியங்களாக அமைந்துள்ளன. இவற்றுக்கு நிகரான சிறப்பு மலர் எதுவும் இதுவரை இந்த நாட்டிலே வெளிவரவில்லை.

இந்த மகாநாட்டிலே கல்விக்குழு கருத்தரங்குகள் ஆராய்ச்சி நிலையிலும் பொது நிலையிலும் வெவ்வேறாக நடைபெறுவது ஒரு சிறப்பு அம்சமாகும். நூற்றுக்கணக்கான அறிஞர்கள் இந்து சமயத்தின் பல்வேறு அம்சங்கள் பற்றி ஆராய்ச்சிக் கருத்தரங்கிலே படிக்கவுள்ளனர். அவை மூன்று நாட்கள் நான்கு வேறு மண்டபங்களில் இந்த நிறுவனத்திலே நடைபெறவுள்ளன. பொது அரங்குகள், இந்து சமய மகாநாடு, மகளிர் மகாநாடு, இளைஞர் மகாநாடு, சைவசமய மகாநாடு என நடைபெறவுள்ளன. இத்தகைய கருத்தரங்குகள் இந்த மகாநாட்டில்தான் முதன்முதலில் நடைபெறவுள்ளன.

பெருந்தொகையான இளைஞர்கள் கலந்து கொள்கின்றமை இந்த மகாநாட்டின் சிறப்பம்சமாகும். கல்லூரி மாணவர்களுக்கும், ஆசிரியர்களுக்கும், பொது மக்களுக்கும் இந்து சமயம், இந்து கலாசாரம் என்பன பற்றிய அறிவினை விருத்தி செய்யக்கூடிய வகையில் சிறந்த முறையிலே பொருட்காட்சியொன்று இம் மகாநாட்டின் ஞாபகமாக நடைபெறுகின்றது. உலகெங்கிலும் வாழுகின்ற இந்துக்களின் மத்தியிலே சமய எழுச்சியினையும், அபிமானத்தையும் ஏற்படுத்தும் வண்ணமாகப் பிராந்திய நகரங்களான யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, திருகோணமலை, வவுனியா, மன்னார், கண்டி, மாத்தளை, பதுளை முதலியவற்றிலே சமய நிகழ்ச்சிகளும். கலாசார நிகழ்ச்சிகளும் மிகச் சிறப்பாக நடைபெறுகின்றன.

ஒருபொழுதும் இடம்பெறாத அளவிற்கு மிகச் சிறப்பான கலை நிகழ்ச்சிகள் இம் மகாநாட்டில் கொழும்பில் இடம்பெறவுள்ளன. 150இற்கும்

மேலான உள்நாட்டுக் கலைஞர்களும் 75 வரையான வெளிநாட்டுக் கலைஞர்களம் நிகழ்ச்சிகளை அரங்கேற்றவுள்ளனர். உலகப் பிரசித்தி பெற்ற பல கலைஞர்களும் அவர்களில் அடங்குவர். பிரபலமான கலைஞரிற் சிலர் ஆய்வரங்குகளிலே ஆய்வுரைகளையும் சமர்ப்பிக்கவுள்ளனர்.

இந்து சமயம் அஹிம்சை நெறியினை தனது அடிப்படை நெறியாகக் கொண்டது. அந்தவகையில் ஈழத்துச் சைவர்களும் அறநெறியினை மிகவும் ஈடுபாட்டுடன் கடைப்பிடிப்பவர்கள். வன்முறைக் கலாசாரம் என்பது அவர்களுக்கு அந்நியமானதொன்று. எனினும் துரதிஷ்டவசமாக நமது இளைஞர்கள் போராளிகளாக மாறவேண்டிய சூழல் ஏற்பட்டது. அவர்கள் இயல்பிலேயே வன்முறையாளர்களல்ல. கொன்றன்ன இன்னா செய்யாமை நெறிப்பட்ட கலாசாரத்தில் வாழ்ந்தவர்கள். இப்போது சூழல்கள் மாறுகின்றபோது அவர்களுக்கும் அரசுக்கும் இடையிலான புரிந்துணர்வு காரணமாக மாறுகின்றவேளையில், அரசு எடுக்கும் ஆக்கபூர்வமான மாநாடு, ஓர் சிறந்த உந்துசக்தியாக விளங்கவேண்டும் என்பதே எனது அவா.

* * *




இலங்கை தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியத்தின் விருது வழங்கும் வைபவத்தில் மாண்புமிகு அமைச்சர்



# மலேசியா கோலாலம்பூரில் 2003 செப்ரெம்பர் 26-28 இல் நடைபெற்ற 9ஆவது சைவ மகாநாட்டில் கௌரவ அமைச்சர் அவர்கள் ஆற்றிய உரை

இருபது ஆண்டுகள் எமது நாட்டிலே நடைபெற்ற உள்நாட்டுப் போரினால் மிகப் பாரிய அளவில் அழிவுகளைச் சந்தித்த இலங்கைத் தமிழ் மக்களாகிய சைவ மக்கள், தமது மதத்தின் பால் கொண்டுள்ள அசையாத பக்தியினால் இன்றும் தலைநிமிர்ந்து வாழுகின்றார்கள். மலேஷியவின் தலைநகர் கோலாலம்பூரில் இன்று கோலாகலமாக ஆரம்பமாகியுள்ள ஒன்பதாவது உலகச் சைவ மாநாட்டிற்கு, இலங்கையில் இருந்து ஐம்பதிற்கு மேற்பட்ட பிரதிநிதிகள் கலந்து கொள்கிறார்கள். எமது நாட்டின் ஒரே ஆதீனமாகிய நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனத்தின் குருமகா சன்னிதானம் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் இங்கு எழுந்தருளியிருக்கின்றார்கள். எமது அரசாங்கத்தின் சார்பாக நானும் என்னுடன் மத்திய மாகாண கல்வி அமைச்சருமாகிய இராதாகிருஷ்ணனும் இங்கு வந்திருக்கிறோம்.

யாழ்ப்பாணம் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் பெருமான் காட்டிய பாதையிலே இன்னும் அங்குள்ள இந்துப் பெருமக்கள் சிவபெருமானை முழுமுதற் கடவுளாக வழிபடும் சைவ சமயத்தை இறுகப் பற்றியிருப்பதை அனைவரும் அறிவர். இந்து சமயத்திற்கென ஒரு அமைச்சைக் கொண்டிருக்கும் ஒரே நாடு இலங்கையாகும். அந்த நாட்டின் இந்து சமய விவகார அலுவல்கள் அமைச்சர் என்ற வகையிலும் ஒரு சைவன் என்ற வகையிலும் இந்த உலக சைவ மாநாட்டில் கலந்து கொள்வதையிட்டு மிகவும் பெருமைப்படுகின்றேன்.

போரினால் எமது மக்கள் மட்டுமல்ல ஆயிரக்கணக்கான சைவக் கோயில்களும் அழிவுகளுக்கும் சேதங்களுக்கும் உள்ளாகிவிட்டன. நாயன்மார்களால் பாடல் பெற்ற தலங்களும், புகழ்பூத்த வரலாற்றுப் பின்னணியைக் கொண்ட கோயில்களும் இவற்றுள் அடங்கும். சென்ற ஆண்டு இலங்கைக்கு உத்தியோக பூர்வ விஜயத்தை மேற்கொண்டிருந்த மலேஷிய நாட்டின் பொதுப் பணித்துறை அமைச்சர் டத்தோ சாமிவேலு அவர்களுடன் பலதரப்பட்ட விடயங்களை பற்றி பேச்சுவார்த்தை நடாத்தினார். அவ்வீஜயத்தின் பொழுது அமைச்சர் சாமிவேலு பாடல்பெற்ற தலமாகிய திருக்கேதீச்சரம் ஆலயத்திற்கு அதன் திருப்பணிக்காக நன்கொடை வழங்கிச் சென்றதையும் இங்கு நன்றியுடன் சுட்டிக் காட்டக் கடமைப்பட்டுள்ளேன். அவர் சைவ சமயத்தின் பால் கொண்டுள்ள ஈடுபாட்டை அறிந்து மிகழ்ச்சி அடைகின்றேன். இன்றைய மாநாட்டை அத்தகைய அமைச்சர் தொடக்கி வைப்பது மிகவும் பொருத்தமானதாகும்.

“இன்று நடைபெறும் மாநாடு எமது எதிர்காலத் தலைமுறையினர் எவ்வாறு தமது சமய விழுமியங்களைப் பேணி உலகில் சிறந்து விளங்க வேண்டுமென்பதற்கான வழிமுறைகளை வகுக்கும் என நம்புகின்றேன். வேகமாக மாறிவரும் இன்றைய நூற்றாண்டில், உலகின் மிகப் பழமையும் பெருமையும் வாய்ந்த சைவ சமயத்தை எமது மக்கள் தமது வாழ்க்கையில் எவ்வாறு கடைப்பிடித்தொழுக வேண்டுமென்பதையும். அம்மக்கள் தமது சமயப் பண்பாட்டின் மூலம் தலைநிமிர்ந்து வாழ வேண்டுமென்பதையும் நாம் ஆராய்ந்து தெளிவான விளக்கங்களை கொடுக்க வேண்டும். இது எமது கடமை.

சென்ற மே மாதம் எனது அமைச்சு இன்றைய அரசாங்கத்தின் ஆதரவுடன் மிகப் பிரமாண்டமான முறையில் இரண்டாவது உலக இந்து மாநாட்டை கொழும்பிலும் வடக்கு, கிழக்கு மலைநாடு உட்பட பல இடங்களிலும் பல தினங்கள் நடாத்தியது. இம்மாநாடு பெரும் எழுச்சியை எமது நாட்டில் மட்டுமன்றி, இந்துக்கள் வாழும் பல்வேறு நாடுகளிலும் ஏற்படுத்தியது. இதனால் இன்று நம்மக்கள் பெரும் விழிப்புணர்வு பெற்றுக் கொண்டார்கள் தொடர்ந்தும் இம்மாதிரியான மாநாடுகளையும் ஏனைய பணிகளையும் முன்னெடுத்துச் செல்ல எனது அமைச்சு திட்டமிட்டுள்ளது. அடுத்த ஆண்டு இலங்கையில் தமிழகத்தின் முதன்மை ஆதீன குருமகா சன்னிதானங்களின் முன்னிலையில் சைவ மாநாடொன்று எனது அமைச்சினால் நடாத்தப்படும்.




2ஆம் உலக இந்து மாநாட்டின் பிராந்திய நிகழ்வு யாழ்.மாவட்டத்தில் நடைபெற்ற பொழுது சித்தன்கேணி ஸ்ரீமகாகணபதி பிள்ளையார் ஆலயத்தில் மாண்புமிகு தி.மகேஸ்வரன் அவர்கள் உரையாற்றுவதையும் அரங்கில் நல்லை ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகளும் ஏனைய சமயப் பெரியார்களும் அமர்ந்திருப்பதையும் காணலாம்.




அளவெட்டி ஸ்ரீ ராகவரத நாரயணசுவாமிகள் ஆலயத்தில் உலக இந்து மாநாட்டுக்கு வருகை தந்த இந்திய அறிஞர்கள் புடைசூழ மாண்புமிகு அமைச்சர் அவர்கள் காணப்படுகின்றார்.




2வது உலக இந்து மாநாட்டின் பிராந்திய நிகழ்ச்சி வவுனியா மாவட்டத்தில் இடம்பெற்ற பொது எழுச்சிப் பேரணியில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள், நல்லை ஆதீன முதல்வர், மற்றும் பிரமுகர்கள்




2ஆம் உலக இந்து மாநாட்டை முன்னிட்டு யாழ்மாவட்டத்தில் உள்ள நாவாந்துறையில் வீதி மரதன் ஓட்டத்தை மாண்புமிகு அமைச்சர் ஆரம்பித்து வைத்த போது எடுக்கப்பட்ட படம். அருகில் பிரதேச மக்கள் சூழவுள்ளனர்.




2ஆம் உலக மகாநாட்டின் பிராந்திய நிகழ்வு வவுனியா மாவட்டத்தில் வெற்றிகரமாக நடை பெற்ற போது அங்கு நடந்த ஊர்வலத்தில் அமைச்சர் மாண்புமிகு தி.மகேஸ்வரன் அவர்களையும் நல்லூர் ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞான சம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள் மற்றும் இந்து சமய அடியார்களையும் காணலாம்.




2ஆம் உலக மகாநாட்டின் பிராந்திய நிகழ்வுக்கான ஊர்வலம் திருநெல்வேலி சிவன்கோவிலில் ஆரம்பித்து நல்லூர் கந்தசாமி கோவிலில் நிறைவு பெற்ற பொழுது மாண்புமிகு அமைச்சர் தி.மகேஸ்வரன் அவர்களையும் அவரைச் சூழ இந்து மதக் குருக்களையும் கலந்து கொண்ட அடியார்களையும் காணலாம்.



2ஆம் உலக இந்து மாநாட்டின் பிராந்திய நிகழ்ச்சி யாழ் மாவட்டத்தில் கோலாகலமாக நடைபெற்ற பொழுது மாண்புமிகு அமைச்சர் தி.மகேஸ்வரன் தொட்டிலடி சண்டிலிப்பாய் கண்ணன் முன்பள்ளி மாணவர்கள் அறநெறிப் பாடசாலை ஆசிரியர்கள் மற்றும் அவ்வூர்ப் பெரியார்களும் காணப்படுகின்றனர்.



யாழ்ப்பாணம் செயலக அலுவலகத்தில் மாண்புமிகு அமைச்சர் தமது அமைச்சுப் பொறுப்புக்களை ஏற்கும் வைபவத்தின் போது.



4 –



யாழ்ப்பாணத்தில் அந்தணர்களுக்கான வேதாகம குருகுல திறப்பு விழாவில் எதிர்க்கட்சித் தலைவர், மற்றும் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் அந்தணர், சமயப் பெரியார்கள் சகிதம் மாண்புமிகு அமைச்சர்.




இந்து சமய நிறுவனங்கள் ஆலயங்களுக்கான நிதியுதவி வழங்கல் வைபவத்தில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் காசோலையை கையளிக்கின்றார்.




மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்து சமய நிறுவனங்கள், ஆலயங்களுக்கு கறவைப் பசுக்களை வழங்கும் நிகழ்ச்சியொன்று.




காரைநகர் டாக்டர் ஆ.தியாகராசா மத்திய மகாவித்தியாலயத்திற்கு மாண்புமிகு அமைச்சர் தி.மகேஸ்வரன் அவர்கள் அப்பாடசாலை அதிபர் மு.சு.வேலாயுதபிள்ளையிடம் பாண்ட் செற்களை கையளிக்கின்றார்.



கிராமிய மின்னொளி கருத்திட்டத்தில் அமைக்கப்பட்ட மின் இணைப்புக்களை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆரம்பித்து வைக்கின்றார்.




யாழ் மாவட்டத்தில் யுத்தத்தினால் பாதிப்படைந்த குருநகர் வாழ் மக்கள் இல்லங்களுக்கு கூரைத்தகடுகளை வழங்கி அது போடப்பட்டிருப்பதை நேரில் பார்வையிடுகின்றார், அமைச்சர் மாண்புமிகு தி.மகேஸ்வரன் அவர்கள்.





யாழ்ப்பாணத்தில் யுத்தத்தினால் சேதமுற்று அழிவடைந்த முஸ்லிம் மக்களின் வீடுகளுக்கு அமைச்சர் மாண்புமிகு தி.மகேஸ்வரன் அவர்கள் சீமெந்துப்பைகளை மௌலவியிடம் கையளிப்பதைப் படத்தில் காணலாம்.





யுத்தத்தினால் சேதமுற்ற வீடுகளிற்கான கூரைத்தகடுகள் மாண்புமிகு அமைச்சர் அவர்களால் குருநகர் பிரதேச மக்களுக்கு வழங்கப்படுகின்றது.



திருகோணமலை ஸ்ரீ பத்திரகாளி அம்மன் கோயிலுக்கான பூசைப்பொருட்களை மாண்புமிகு அமைச்சர் ஆலயப் பிரதம குருக்களிடம் வழங்குகின்றார்.



தெல்லிப்பளை தோதரை அம்மன் அறநெறிப் பாடசாலையை மாண்புமிகு அமைச்சர் திறந்து வைக்கின்றார்.



மாண்புமிகு அமைச்சர் காரைநகர் களபூமி மக்களுக்கு மின்சார இணைப்புக்களை வழங்கியபோது....



2ஆம் உலக இந்து மாநாட்டின் பிராந்திய நிகழ்வு வவுனியா மாவட்டத்தில் நடைபெற்ற போது அமைச்சர் மாண்புமிகு தி.மகேஸ்வரன் மங்கள விளக்கு ஏற்றி ஆரம்பித்து வைப்பதையும், அருகில் வவுனியா மாவட்ட அரசாங்க அதிபர் ம.கணேஷ் அவர்களையும் நல்லை ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள் அவர்கள் பார்வையிடுவதையும் காணலாம்.




2ஆம் உலக இந்து மாநாட்டை முன்னிட்டு வவுனியா மாவட்டத்தில் பூந்தோட்டப் பகுதியில் உள்ள நரசிம்மராலயத்தின் அறநெறிப் பாடசாலையின் நாடாவை மாண்புமிகு தி.மகேஸ்வரன் அவர்களும் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய அவர்களும் வெட்டி திறந்து வைத்த போது.



யாழ் பிராந்திய தொலைபேசி விஸ்தரிப்பு தொடர்பாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ரெலிகொம் நிறுவன பிரதம நிறைவேற்று அதிகாரி அனான் உடன் கலந்தாலோசிக்கின்றார்.


# இலண்டனில் அமைச்சர்



6வது சைவ மாநாட்டில் கலந்து கொண்ட மாண்புமிகு அமைச்சர் இலண்டன் அருள்மிகு துர்க்கையம்மன் ஆலயத்தில் வழிபாட்டினை மேற்கொள்கின்றார்



இலண்டனில் இடம்பெற்ற 6வது சைவ மாநாட்டு வைபவத்தில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உரையாற்றுகின்றார்.





இலண்டனில் இடம்பெற்ற 6வது சைவ மாநாட்டில் மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நினைவுப் பரிசில் வழங்கப்படுகின்றது.



தேசிய விழாவாக கொண்டாடப்படும் தீபாவளி தொடர்பாக அமைச்சில் இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் மாண்புமிகு அமைச்சர் தீபாவளி கொண்டாட்டம் பற்றி விளக்கம் அளிக்கின்றார். அருகில் அமைச்சின் அதிகாரிகள் மற்றும் ஊடகவியலாளர்கள்.



பனை அபிவிருத்திச் சபையின் 25 ஆண்டு நிறைவு விழாவையொட்டி பனை அபிவிருத்தி ஆராய்ச்சி தேசிய கருத்தரங்கில் பிரதம விருந்தினராக கலந்து கொண்ட அமைச்சர், சபையின் தலைவர் திரு.பொ.சிவபாதம் ஆகியோர்.



பண்டாரவளை இந்து இளைஞர் மன்றத்தின் 30ம் ஆண்டு நிறைவு விழா முன்னிட்டு ஊவாமாகாண அறநெறி விழாவின் போது மாண்புமிகு அமைச்சர், கௌரவ அமைச்சர் திரு.சந்திரசேகரன், பதுளை பாராளுமன்ற உறுப்பினர் திரு.வேலாயுதம் மற்றும் பிரமுகர்கள்.



2ஆம் உலக இந்து மாநாட்டின் ஞாபகமாக வல்லிபுர ஆழ்வார் ஆலயத்தில் அமைக்கப்பட்ட அன்னதான மண்டபத்தினை மாண்புமிகு அமைச்சர் திறந்து வைக்கின்றார்.



ஊவா மாகாண அறநெறி விழாவில் பிரதம விருந்தினராக கலந்து கொண்ட மாண்புமிகு அமைச்சர் நிகழ்ச்சிகளை கண்டுகளிப்பதனையும் அருகில் கௌரவ அமைச்சர் திரு.சந்திரசேகரன், பதுளை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் திரு.வேலாயுதம், மற்றும் பிரமுகர்களுடன் ஊவாமாகாண மக்கள்.



ஓய்வுபெற்ற பொலிஸ் மாஅதிபர் திரு.ஆனந்தராஜா அவர்களை மாண்புமிகு அமைச்சர் சந்தித்து அவரின் சேவையைப் பாராட்டி வாழ்த்துக்களைத் தெரிவிக்கின்றார்.



தமிழ் ஊடகவியலாளர்கள் ஒன்றியத்தின் மூலம் வெள்ளவத்தை இராமகிருஷ்ணமிசன் மண்டபத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளருக்கு விருது வழங்கும் விழாவில் தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியத்துக்கான இணையதளத்தை மாண்புமிகு அமைச்சர் அவர்களுடன் அமைச்சர் சந்திரசேகரன் அவர்களும் ஆரம்பித்து வைக்கின்றார்கள்.



காரைநகர் ஈழத்துச் சிதம்பரத்துக்கான மின்சார இணைப்பினை மாண்புமிகு அமைச்சரும் ஆலய குருக்கள் வைத்தீஸ்வர குருக்களும் இணைந்து ஆரம்பித்து வைக்கின்றார்கள்.





இந்து சமய விவகார அலுவல்கள் அமைச்சர் மாண்புமிகு தி.மகேஸ்வரன் அவர்கள் பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரியில் நடைபெற்ற வாணி விழாவில் கலந்து கொண்டபோது அப்பாடசாலை மாணவர்களால் மலர்மாலை அணிவித்து வரவேற்கும் காட்சி அருகில் அக்கல்லூரி அதிபர், ஆசிரியர்கள் உடன் அமைச்சின் ஊடக செயலாளர் ஆகியோர் உள்ளார்கள்.



இந்து சமய விவகார அலுவல்கள் அமைச்சு முன்னெடுக்கும் "75 நாட்களில் 750 வீடுகள்" திட்டத்திற்கான அடிக்கல்லை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நாட்டிவைக்கின்றார்.




காரைநகரில் கமநல சேவை நிலையத்துக்கான அடிக்கல்லை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நாட்டிவைக்கின்றார்.



மாண்புமிகு அமைச்சர் முன்னெடுக்கும் மதமாற்ற தடைச்சட்டத்திற்கு தமது ஆதரவைத் தெரிவித்து அமைச்சரின் அலுவலகத்தில் மாண்புமிகு அமைச்சர் அவர்களுடன் உரையாடும் பௌத்த பிக்குகள்.



இந்திய இந்திரா காங்கிரஸ் பிரமுகர் குமரி ஆனந்தன் அவர்கள் அமைச்சர் அவர்களைச் சந்தித்த போது அவருக்கு 2வது உலக இந்து மாநாட்டு விசேட மலரின் பிரதியை வழங்கினார்.



ஏழாலை வசந்தபுரம் நாகபூசணி அம்மன் ஆலயத்தின் மண்டபத்தினை மாண்புமிகு அமைச்சர் அவர்களுடன் நாடாளுமன்ற உறுப்பினர் அப்பாத்துரை விநாயகமூர்த்தி அவர்களும் திறந்து வைக்கின்றார்கள்.



ஏழாலை வசந்தபுரம் நாகபூசணி அம்மன் ஆலயத்தில் மண்டப திறப்பு விழாவிற்கு மாண்புமிகு அமைச்சர் கௌரவிக்கப்பட்டு அழைத்துவரப்படுகின்றார்.



பருத்தித்துறை சுப்பர் மடம் முனீஸ்வர ஆலயத்தின் கும்பாபிஷேக நிறைவு வைபவத்தில் மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு வாழ்த்துமடலை ஆலய நிர்வாகிகள் கையளிக்கின்றார்கள்.




கைதடி பிள்ளையார் ஆலயத்தில் சிற்பக்கலைஞரை மாண்புமிகு அமைச்சர் பதக்கம் அணிவித்து கௌரவிக்கின்றார்.



தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியத்தின் ஊடகவியலாளர்களுக்கு விருது வழங்கும் விழாவில், பிரதம விருந்தினராக கலந்து கொண்ட மாண்புமிகு அமைச்சர், நாடாளுமன்ற உறுப்பினர்கள், பிரமுகர்கள் உடன் அமர்ந்திருக்கின்றார்.



வடக்கின் உயர் பாதுகாப்பு வலயம் தொடர்பாக பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பன அவர்களுடன் மாண்புமிகு அமைச்சர் உரையாடிய காட்சி.



திருவாடுதுறை ஆதீன முதல்வர் யாழ்ப்பாணம் சென்ற போது நல்லை ஆதீன முதல்வர் சகிதம் மாண்புமிகு அமைச்சர் அழைத்துச் செல்லும் காட்சி.



மாண்புமிகு அமைச்சர் அவர்கள் திருவாவடுதுறை ஆதீன முதல்வருக்கு நினைவு பரிசில் வழங்குகின்றார்.




ஊவா மாகாண அறநெறி விழாவில், பண்டாரவளை இந்து மாமன்ற நிர்வாகத்தினர்களுடன் மாண்புமிகு அமைச்சர் அருகில் பதுளை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் திரு.வேலாயுதம்.




மீசாலையில் 2ம் உலக இந்து மாநாட்டு ஞாபகார்த்தமாக அமைக்கப்பட்ட அன்னதான மண்டபத்தை மாண்புமிகு அமைச்சர் திரைநீக்கம் செய்கின்றார்.




வதிரி, கரவெட்டி பரமாநந்தா ஆச்சிரமத்துக்கு மாண்புமிகு அமைச்சர் பஸ் வண்டியை வழங்கும் காட்சி.



சிலாபத்தில் உள்ள முன்னேச்சர ஆலயத்திற்கு மாண்புமிகு அமைச்சர் தி.மகேஸ்வரன் அவர்கள் அவ்வாலய தர்மகர்த்தாவிடம் பஞ்சாராத்தி தீபத்தை கையளிக்கின்றார் அருகில் புத்தள மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் நியூமால் பெரேராவும் காணப்படுகின்றார்.




தெரணியகல பிரதேச இந்து ஆலயங்களுக்கான பூஜைப் பொருட்களை மாண்புமிகு அமைச்சர் வழங்குகின்றார்.

# சேதமடைந்த ஆலயங்கள்



போரினால் பாதிப்படைந்த சாவகச்சேரி பிரதேசத்தில் உள்ள
சித்தன் மாவடிப் பிள்ளையார் கோயில்




திருகோணமலை வீரகத்தி
விநாயகர் ஆலயத்தின்
அழிவுகளை மாண்புமிகு
அமைச்சர் அவர்கள் நேரடியாகப்
பார்வையிடுகின்றார்.



சித்தன் மாவடி பிள்ளையார்
கோவில், கல்வயல்,
சாவகச்சேரி

# உலகை ஒன்றுபடுத்தும் ஒளித்திருநாள்

- *கலாபூஷணம் வித்துவான்*
*திருமதி வசந்தா வைத்தியநாதன்.*

இந்து மதம் ஆழமாக வேர்விட்டு, அகலமாக விழுதுகளை இறக்கி, முன்னைப் பழம் பொருட்கும் முன்னைப் பழம் பொருளாய், பின்னைப் புதுமைக்கும் பேர்த்தும் அப்பெற்றியதாய்ப் பொலிவு குன்றாமல் புதுமணப் பெண்ணாய் காட்சி வழங்குகின்றது. இதற்குப் பின் தோன்றிய பல்வேறு மதங்கள் காலவெள்ளத்தில் அள்ளுண்டு போக இந்துமதம் மட்டும் உலகின் மூலைமுடுக்குகளில் கூடப் புகுந்து நிலைத்திருப்பது பேராச்சரியமானது. இந்த நிலைபேற்றிற்குக் காரணம் ஆழமான, விளக்கமுடியாத வாழ்வியல் உண்மைகளைக் கதைகள் மூலமாகவும், விழாக்கள், விரதங்களை அனுஷ்டிப்பதன் மூலமாகவும், பட்டிதொட்டி எங்கும் படித்தவன் முதல் பாமரன் ஈறாக அனைவர் மனத்திலும் ஆழமாகப் பதியமிடுகின்றது.

விரதங்கள் சற்றுக் கடுமையான பாதையில் நம்மை அழைத்துச் சென்றாலும் விழாக்கள் மிகவும் மகிழ்ச்சியும், இன்பமும் தந்து நம்மைப் பதப்படுத்துகின்றன. விரதம் சற்றுக் கசப்பான குளிசை. விழாக்கள் இனிப்புக் கலந்தது. இரண்டுமே மனித மனத்தையும், உடலையும் சமநிலைப்படுத்துகின்றன. துன்பத்தில் துவளாமலும், இன்பத்தில் மீதுறாமலும் கட்டுப்படுத்துகின்றன. சான்றாக,

உள்ளவர்கள். அவர்கள் இப்படி ஒரு வெற்று விழாவைத் தந்திருக்கமாட்டார்கள். அவர்கள் தருவதெல்லாம் வெற்றி விழாக்கள் தான். அப்படியென்றால் "தீபாவளி" நமக்கு வழங்கும் உண்மைப் பொருள் என்ன? சற்றுச் சிந்திப்போம்.

பொறுமையே உருவமாகிய பூமித்தாய்க்கும், புருஷர்களில் சிறந்த புருஷோத்தமனுக்கும் பிறந்தவன் நரகாசுரன். தீமையின் கொள்கலன். ஆணவத்தின் ஒட்டுமொத்த உருவம். அகங்காரத்தின் விளைநிலம். உயர்ந்த பெற்றோர்களுக்கு இப்படி ஒரு வாரிசு. ஆம் ......... உயர்ந்த பாற்கடலில் தானே உயிரைக் கொல்லும் ஆலகால நஞ்சு உருவாகியது. அதுபோலத்தான் நரகனும் உருவானான். –"நரகன்" என்ற சொல்லிற்கே இழிந்தவன் என்பதுதான் பொருள். பெயருக்கு ஏற்பவே குணமும் அமைந்துவிட்டது. பெற்றோர்களே! இது உங்களுக்கு ஒருபாடம். உங்கள் குழந்தைகளுக்கு உயர்ந்த பண்புடைய பெயரைச் சூட்டுங்கள். பெயரைச் சொல்லி அழைக்க அழைக்க அப் பண்புகள் குழந்தைகளை( உருவாக்கிவிடும்.

நரகாசுரன் தேவர்களுக்கும், மக்களுக்கும் சொல்லொணாத கொடுமைகளை இழைத்தான். அவர்களை அனலிலிட்ட புழுப்போல வாட்டினான். வதைத்தான். இதனைக் கண்ட பூதேவியின் பெற்ற வயிறு பற்றி எரிந்தது.

சித்திரைப் புத்தாண்டு ஆண்டின் ஆரம்ப நிலையிலேயே முழு ஆண்டின் பாரத்தைச் சுமப்பதற்கு நம்மைத் தயார்ப்படுத்துகிறது. புத்தாண்டின் அதிகாலையில் நீராடும் மருத்துநீர், பல மூலிகைகளின் சாறு. நமது உடலிற்குப் புது உற்சாகத்தைக் கொடுக்கின்றது. விருந்தும், விளையாட்டுக்களும் உள்ளத்திற்கு உவகையூட்டுகின்றன.

வைகாசி விசாகம், ஆனி உத்தரம், ஆடிப் பிறப்பு, ஆவணி மூலம், நவராத்திரியில் மதுகைடப வதம், மகிஷா சுர சமஹாரம், சும்ப நிசும்ப வதம் என்பன வாழ்க்கையின் இன்பங்கள் தான் துன்பத்திற்குள் நம்மை அழைத்துச் செல்கின்றன என்று எச்சரிக்கை செய்கின்றன. வாழ்வில் ஒவ்வொரு கணமும் நமக்கு உயிர் நாடி. இழந்தால் பெறமுடியாது. சோம்பல், தாமதம், அஜாக்கிரதை இவைகள் காலத்தைக் கொல்லும் காலனின் படைகள் மனிதனே! சிந்தித்துச் செயற்படு என்று அபாய அறிவிப்புத் தருகின்றது. அடுத்து ........ நம்மிடமிருந்தே தோன்றி நம்மை அதலபாதாளத்தில் வீழ்த்தும் பொய்ம்மை. இதனைச் சத்தியத்தின் துணைகொண்டு வெல்லலாம். இதனை உணர்த்தும் உணர்வே நவராத்திரி.

இந்த வரிசையில் தீபாவளி விழாவும் இணைகிறது. புத்தாடைகளைப் புனையவும், புதிய உணவு வகைகளை உண்ணவும் ஒரு திருவிழாவா? இல்லை ........... நிச்சயமாக இல்லை. நமது முன்னோர்கள் சிந்தனை வளம் சத்தியபாமையின் உருவிலே திருமாலின் சக்கரத்தினால் நரகாசுரனைப் பிளந்து அழித்தாள். "பொல்லாத சேயெனில் தாய்தள்ளல் நீதமோ" என்ற உரையைப் பொய்யாக்கினாள். இன்றைய தாய்மார்களுக்கும் இது ஒரு செய்தி. அளவிற்கதிகமாக சலுகைகளை அளித்துக் குழந்தைகளைச் சமூக விரோதிகளாக மாற்றிவிடாதீர்கள்.

தீயவனான நரகனுக்கு உயிர்பிரியும் நேரத்தில் நல்லறிவு தலைப்பட்டது. தான் இறந்தநாளைத் தீமைகள் அழிந்த நாளாக மக்கள் மகிழ்ச்சியுடன் எண்ணெய் தேய்த்து நீராடி, புத்தாடை புனைந்து விருந்துண்டு மகிழவேண்டும் என்று வரமாக யாசித்தான். அந்நாள் தான் நரக சதுர்தசி" யான தீபாவளி. தென்னாட்டை விட வட இந்திய மக்கள் மிகச் சிறப்பாக இந்நாளைக் கொண்டாடுகின்றனர். திரயோதசி, சதுர்தசி, அமாவாசை, சுக்ல பிரதமை ஆகிய நான்கு நாட்களும் தீபாவளிப் பண்டிகையுடன் தொடர்புபட்ட நாட்களாகும். வட இந்தியாவில் அமாவாசை, சுக்ல பிரதமை ஆகிய நான்கு நாட்களும் தீபாவளிப் பண்டிகையுடன் தொடர்புபட்ட நாட்களாகும். வட இந்தியாவில் அமாவாசை, பிரதமையை

முதன்மையாகக் கொண்டும், தமிழ் நாட்டில் திரயோதசி சதுர்தசியை முதன்மையாகக் கொண்டும் கொண்டாடுகின்றனர். தீபாவளியன்று நல்லெண்ணெய் தேய்த்து வெந்நீரில் நீராடுவது சம்பிரதாயம். எள் எண்ணெயில் லக்ஸ்மியும், நீரில் கங்கையும் வருவதாக ஐதீகம். இதிலும் ஒரு சிறப்பு. காசிக்குச் சென்று கங்கையில் நீராட முடியாதவர்களுக்காக கங்காதேவியே அவரவர் வீட்டிற்கும் வருகிறாளாம். என்னே! தாயன்பு. "தைலே லக்ஸ்மி", "ஜலே கங்கா" – எண்ணெய் தேய்த்து நீராடுவதால் வறுமை தொலைந்து செல்வம் பெருகும். கங்கை உடல்மாசுகளை மட்டுமல்ல உள்ள மாசுகளையும் போக்கித் தூய்மையை நல்குவாள். தீபாவளியன்று அமாவாசையும் சேர்வதால் மனிதர்களும் மகிழ்வு கொள்கின்றார்கள்.

உலகினர் பொதுவாகப் பிறந்த நாளைத் தான் கொண்டாடுவது தான் வழக்கம். அதற்கு மாறாக ஒருவருடைய இறந்த நாளைப் பண்டிகையாகக் கொண்டாடுவது தீபாவளியின் தனிச் சிறப்பு.

வங்காளிகள் இந்நாளைக் "காளி பூஜை" த்திருநாளாகக் கொண்டாடுகின்றார்கள். வட இந்தியாவிலும், கிழக்கு ஆசிய நாட்டிலும் "குபேர பூஜை" நாளாகத் திகழ்கின்றது. ஸ்ரீராம பிரான் வனவாசம் முடிந்து தீபாவளித் திருநாளில் தான் அயோத்தி நகர் திரும்பியதாகவும், அவரை வரவேற்க அயோத்தி நகர் முழுவதையும் விளக்குகளால் அலங்கரித்தார்கள் என்றும் அதுவே பிற்காலத்தில் தீப ஆவலி தீபத் திருநாளாக மலர்ந்தது என்றுங் கூறுகின்றார்கள்.

பிரகலாதனின் பேரனான மகாபலிச் சக்கரவர்த்தி முடிசூடிக் கொண்டது தீபாவளித் திருநாளில், ஜைனமதக் குருவான வர்த்தமான மகாவீரர் பரிநிர்வாணம் அடைந்ததும் சீக்கியமத ஸ்தாபகரான குருநானக்கும் ஆரிய சமாஜ இயக்கத் தலைவரான சுவாமி தயானந்த சரஸ்வதியும், வீடுபேறடைந்ததும் இத் திருநாளிலேயே.

குப்த அரசர்களுள் சிறந்த சந்திர குப்த விக்கிரமாதித்தன் அரியணை ஏறிய தீபாவளித் திருநாளிலிருந்து விக்கிரம சகாப்தம் ஆரம்பமாகின்றது. ஆதிசங்கரர் ஞானபீடங்களைத் தோற்றுவித்ததும் ஒரு தீபாவளித் திருநாளில் தான் என்று கூறப்படுகின்றது. தீபாவளித் திருநாளில் ஏற்றப்படும் தீபமே காலதேவனான யமனுக்கு உவப்பானது. ஆதலால் இதனை "யமதீபம்" என்று வாமன புராணம் கூறுகின்றது.

இவ்வாறு பல புராணத் தொடர்களையும் நம்பிக்கைகளையும் கொண்ட தீபாவளித் திருநாளை "தேசிய விழா"வாகக் கொண்டாடப் பெறுவது பொருத்தமானது. இதற்குக் கால்கோளிட்ட இலங்கைப் பிரதமரையும் இந்து சமய விவகார அலுவல்கள் அமைச்சரையும் பாராட்டுவது நமது கடமை.

இத் தீபத் திருநாளில் உலகைச் சூழ்ந்துள்ள பகை, கோபம், பேராசை போன்ற இருண்ட எண்ணங்கள் அகலவும், நட்பு, அன்பு, சாந்தம், பரோபகாரச் சிந்தனை முதலிய நற்குணங்கள் ஒளிரவும் தீபம் ஏற்றுவோம். அஞ்ஞானம் இரிய ஞானதீபம் ஏற்றுவோம். அத்தீப ஒளியில் அமைதி தவழட்டும். அன்பு பெருகட்டும். மகிழ்ச்சி மத்தாப்புப் பூக்களாக மலரட்டும்.

இந்த ஒளித் திருநாளில் உலகத்தை எல்லாம் தனது அருள் நிழலில் காத்துநிற்கும் கண்ணனின் கழலடி பணிவோம்.




இலங்கை தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியத்தின்
விருது வழங்கும் வைபவத்தில் மாண்புமிகு
அமைச்சர்

## திருவாவடுதுறை ஆதீனம் 23ஆவது குருமகா சந்நிதானம் இலங்கை விஜயம்

திருவாவடுதுறை ஆதீன குருமகாசன்னிதானம் சீர்வளர்சீர் சிவப்பிரகாச தேசிக ஞானசம்பந்த பரமாச்சார்ய சுவாமிகள் வரலாற்றில் முதல் தடவையாக தமது கடல் கடந்த பயணமாக இலங்கை நாட்டுக்கு 2003 ஆகஸ்ட் மாதம் 22ஆம் திகதி எழுந்தருளினார். வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த குருமகாசன்னிதானத்தின் விஜயத்துக்கு இந்து சமய விவகார அலுவல்கள் அமைச்சர் மாண்புமிகு தியாகராஜா மகேஸ்வரன், பா.உ., அவர்கள் விடுத்த வேண்டுகோளை அடுத்து அரசாங்கம் ஒருநாட்டின் அரச பிரதிநிதி ஒருவருக்கு வழங்கக்கூடிய உயர் அந்தஸ்தை வழங்கியது.

22ஆம் திகதி காலை பண்டாரநாயக்கா சர்வதேச விமான நிலையத்தை வந்தடைந்த குருமகாசன்னிதானம் அவர்களை விமான நிலையத்தில் அமைச்சர் தி. மகேஸ்வரன், பா.உ. அவர்களும் அவரது பாரியார் திருமதி விஜயகலா மகேஸ்வரன் அவர்களும் எதிர்கொண்டு வரவேற்றனர். இவ்வரவேற்பு நிகழ்ச்சியில் அமைச்சின் மேலதிகச் செயலாளர் திரு க. பரமலிங்கம், அமைச்சின் ஆலோசகர்களான திரு இ. அன்னலிங்கம், திரு ஆர். பேரின்பநாயகம், பனை அபிவிருத்திச் சபையின் தலைவர் திரு பொ. சிவபாதம், சபையின் செயலாளர் திரு வி. திருஞானசுந்தரம் உட்பட திருக்கேதீஸ்வர ஆலய திருப்பணிச் சபையின் தலைவர் திரு ஆர். நமசிவாயம், கொச்சிக்கடை பொன்னம்பலவாணேஸ்வர ஆலய அறங்காவலர் திரு டி.எம். சுவாமிநாதன், திரு வி. கைலாசபிள்ளை, திரு சின்னத்துரை தனபாலா உட்பட பெருந்திரளானோர் பங்குபற்றினர்.

குருமகாசன்னிதானம் விமான நிலையத்தின் ஊடகத்துறையை சேர்ந்தவர்கள் மத்தியில் உரையாற்றுகையில் பின்வருமாறு கூறினார்
19ஆம் நூற்றாண்டில் யாழ்ப்பாணம் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் அவர்களுக்கு நாவலர் பட்டம் வழங்கியது திருவாவடுதுறை ஆதீனமே. அப்பொழுது முதல் திருவாவடுதுறை ஆதீனத்துடன் ஏற்படுத்தப்பட்ட தொடர்பு இன்றும் நீடிக்கின்றது. இலங்கை நாட்டின் இந்து சமய விவகார அலுவல்கள் அமைச்சராக இளமைத்துடிப்பும், செயற்றிறனும் உள்ள திரு தியாகராசா மகேஸ்வரன், பா.உ. அவர்கள் இருப்பதையிட்டு சந்தோஷப்படுகிறோம். அண்மையில் 2ஆவது உலக இந்து மகாநாட்டை வெகுசிறப்பாக நடாத்தியதையிட்டு பெருமைப்படுகிறோம். அவரது காலத்தில் திருவாவடுதுறை ஆதீனத்துக்கும் இலங்கையிலுள்ள சைவ மக்களுக்குமிடையே நெருங்கிய தொடர்பு ஏற்படும் என நம்புகிறோம். திருவாவடுதுறை ஆதீனத்துக்கு அமைச்சர் விஜயம் மேற்கொள்ள வேண்டும் என அழைப்பு விடுக்கிறோம்.

விமான நிலைய வரவேற்பை தொடர்ந்து குருமகாசன்னிதானம் மோட்டார் பவனியாக கொச்சிக்கடை ஸ்ரீ பொன்னம்பலவானேஸ்வரர் ஆலயத்துக்கு அழைத்துவரப்பட்டார். அன்றைய தினம் மாலையில் பொன்னம்பலவானேஸ்வரர் ஆலயத்துக்கு எழுந்தருளி பக்தர்களுக்கு அருளுரை வழங்கினார். இதற்கு முன்னர் பொன்னம்பலவாணேஸ்வரர் ஆலயத்தில் சிறப்பான வரவேற்பு அளிக்கப்பட்டது.

அன்றையதினம் இரவு திருக்கேதீச்சரநாதர் திருக்கோயில் திருக்குட நன்னீராட்டு நிறைவுவிழாவில் கலந்துகொள்ளும் பொருட்டு அமைச்சின் அதிகாரிகள் புடைசூழ திருக்கேதீச்சரம் நோக்கி பயணமானார். 23ஆம் திகதி காலை கேதீச்சரநாதர் சந்நிதியில் நன்னீராட்டு நிறைவுப் பெருவிழாவில் கலந்துகொண்ட பின்னர் பக்தர்களுக்கு அருளுரையும் தரிசனமும் வழங்கினார். மாலையில் மன்னார் சித்திவிநாயகர் கல்லூரியில் வரவேற்பு அளிக்கப்பட்டது. 24ஆம் திகதி ஞாயிறு காலை கேதீச்சரத்திலிருந்து வவுனியா நோக்கி குருமகாசந்நிதானம் பயணத்தை மேற்கொண்டார். வவுனியா அகிலாண்டேஸ்வரர் திருக்கோயில் தரிசனத்தை தொடர்ந்து மக்களுக்கு அளுரை வழங்கி ஏ9 பாதையூடாக யாழ்ப்பாணம் பயணமானார். யாழ்ப்பாணம் செல்லும் வழியில் கிளிநொச்சி கந்தசுவாமி கோயிலிலும், வல்லிபுர ஆழ்வார் கோயிலிலும் குருமகாசன்னிதானத்துக்கு பெருவரவேற்கு அளிக்கப்பட்டது. 25, 26 ஆகிய இரு தினங்களிலும் யாழ்ப்பாணத்திலுள்ள முக்கிய தலங்களான நல்லூர் கந்தசுவாமி கோயில், தெல்லிப்பளை துர்க்கை அம்மன் கோயில், மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயில், கீரிமலை நகுலேஸ்வரம் கோயில், முதலான பல தங்களுக்கு தரிசனம் செய்து ஆங்காங்கே பக்தர்களுக்கு தரிசனமும் வழங்கினார்.

காரைநகர் ஈழத்து சிதம்பர தரிசனம்
அமைச்சர் பிறந்த கிராமமாகிய காரைநகர் ஈழத்துச் சிதம்பரத்தில் குருமகாசன்னிதானத்துக்கு சிறப்பான வரவேற்பு அளிக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து யாழ்ப்பாணம் இந்து சமய பேரவை மண்டபத்தில் சமய நிறுவனங்கள் தர்மகர்த்தாக்கள் அனைவரும் கூடி சுவாமிகளுக்கு பிரியாவிடை அளித்தார்கள்.

திருக்கோணேஸ்வர தல யாத்திரை
நாயன்மார்களால் தேவாரம் பாடப்பெற்ற திருக்கோணேஸ்வர தல யாத்திரையை 27ஆம்

திகதி புதன் பகல் மேற்கொண்டார். அங்கு திருக்கோணேஸ்வர அறங்காவலர் எம்.கே. செல்வராஜா தலைமையில் சிறப்பான வரவேற்பளிக்கப்பட்டது. பக்தர்களுக்கு ஆசீர்வாதமும் அளிக்கப்பட்டது. கோணேஸ்வர பெருமானின் தரிசனத்தின் பின்னர் குருமகாசன்னிதானம் மீண்டும் கொழும்பு நோக்கிப் பயணமானார்.

28ஆம் திகதி வியாழக்கிழமை பம்பலப்பிட்டி சம்மாங்கோடு மாணிக்கபிள்ளையார் கோயிலில் குருமகாசன்னிதானத்துக்கு இந்து சமய அலுவல்கள் அமைச்சும், திருக்கேதீஸ்வர ஆலய திருப்பணிச் சபையும் இணைந்து மகத்தான வரவேற்பு அளித்தது. பெருந்தொனையாக பக்தர்கள் இங்கு சுவாமிகளை தரிசித்து பிரசாதம் பெற்றுக்கொண்டார்கள். 29ஆம் திகதி வெள்ளிக்கிழமை பகல் மீண்டும் பண்டாரநாயக்கா சர்வதேச விமான நிலையத்திலிருந்து திருவாவடுதுறை ஆதீனம் திரும்பினார்.

திருவாவடுதுறை ஆதீன குருமகாசன்னிதானம் இலங்கையில் மேற்கொண்ட விஜயத்தில் அனைத்து ஏற்பாடுகளையும் நேரடியாக தி. மகேஸ்வரன், பா.உ., அவர்கள் கவனித்ததுடன் தாமே பல நிகழ்ச்சிகளிலும் கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது.

## பேரூர் ஆதீன தவத்திரு மருதாசலம் அடிகளாரின் வருகை

தமிழ்நாடு பேரூர் ஆதீனம் இளையபட்டம் மருதாசலம் அடிகளார் இந்து சமய விவகார அலுவல்கள் அமைச்சு, நடாத்தும் தேசிய தீபாவளி விழாவில் கலந்துகொள்வதற்காக, இலங்கை வருகின்றார்.

இவர் கொழும்பிலும், யாழ்ப்பாணத்திலும் நடைபெறும் தேசிய தீபாவளி விழாக்களில் கலந்து கொண்டு, சிறப்புரையாற்றவுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்

## யாழ் நல்லூர் துர்க்கா மணி மண்டபத்தில் தீபாவளி கொண்டாட்டம்

இந்து சமய விவகார அலுவல்கள் அமைச்சு தேசிய தீபாவளிக் கொண்டாட்டங்களை 2003.10.23ஆந் திகதி வியாழக்கிழமை கொழும்பு மாநகரிலும் தீபாவளித் தினமான 2003.10.24ஆந் திகதி வெள்ளிக்கிழமை யாழ்ப்பாணத்திலும் கொண்டாடுவதற்கான ஏற்பாடுகளைச் செய்துள்ளது.

யாழ்ப்பாணத்தில் தேசிய தீபாவளிக் கொண்டாட்டங்கள் நல்லூர் துர்க்கா மணி மண்டபத்தில் இடம்பெறும். இந்து சமய விவகார அலுவல்கள் அமைச்சர் மாண்புமிகு தியாகராஜா மகேஸ்வரன் அவர்கள் தலைமையில் நடைபெறும் இவ் விழாவில் பேரூர் ஆதீனத்தின் இளையபட்டம் தவத்திரு மருதாசலம் அடிகளார் கலந்துகொள்வார். சிறப்பு நிகழ்ச்சியாக பிரபல வயலின் இசை மேதை குன்னக்குடி வைத்தியநாதனின் வயலின் கச்சேரியும் இடம்பெறும்..



இலங்கை தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியத்தின் விருது வழங்கும் வைபவத்தில் மாண்புமிகு அமைச்சர்

# இரண்டாவது உலக இந்து மகாநாடு - 2003

இந்து சமய விவகார அலுவல்கள் அமைச்சினால் இரண்டாவது உலக இந்து மகாநாடு கடந்த மே மாதம் 2ஆந் திகதி தொடங்கி 6ஆந் திகதி வரை கொழும்பு பண்டாரநாயக்கா சர்வதேச மகாநாட்டு மண்டபம், காலிமுகத் திடல், நுவரெலியா போன்ற இடங்களில் கோலாகலமாக நடத்தப்பட்டது.

1982ஆம் ஆண்டு உலக இந்து மகாநாடு, கொழும்பில் நடந்தேறியது. முதலாவது மகாநாட்டை அப்போது அமைச்சராகவிருந்த கௌரவ செல்லையா இராசதுரை அவர்கள் நடத்தினார். 20 வருடங்களுக்குப் பின்னர் இந்து சமய விவகார அலுவல்கள் அமைச்சராகப் பொறுப்பேற்றுக் கொண்ட மாண்புமிகு தியாகராஜா மகேஸ்வரன் அவர்கள் 2ஆவது உலக இந்த மாநாட்டை வெற்றிகரமாக நடத்திமுடித்துள்ளமை இந்துக்களுக்கு மிகவும் பெருவகைதரும் நிகழ்வாக அமைந்துவிட்டது.

உலக இந்துக்களை ஒன்று கூட்டிய பெருமை இந்து சமய விவகார அலுவல்கள் அமைச்சரையே சார்ந்தது எனலாம். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தமது அமைச்சுப் பொறுப்பை ஏற்றவுடன் இரண்டாவது உலக இந்து மகாநாட்டை நடத்திடவேண்டும் என்ற எண்ணக் கருதோன்றியபோது அவருடைய எண்ணத்தை நிறைவு செய்தல் பொருட்டு அமைச்சின் செயலாளர். ஆலோசகர்கள், ஆலய அறங்காவலர்கள், நிறுவனங்களின் பிரதிநிதிகள் அனைவரும் பூரண ஒத்துழைப்பு வழங்கினர். இவர்களின் ஒத்துழைப்பின் பலனாக, உலக இந்து மகாநாடு, கொழும்பு மாநகரில் மட்டுமல்லாது, பிராந்திய ரீதியாகவும் தனித்தனியாக மாவட்டங்கள் தோறும் நடத்தப்பட்டன.

யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, அம்பாறை, பதுளை, கண்டி, திருகோணமலை, வவுனியா, மன்னார், நுவரெலியா போன்ற இடங்களில் அந்த அந்த மாவட்டங்களின் மண்வாசைன கலந்து சிறப்பாக இடம்பெற்று ஒவ்வொரு இந்துவின் மனத்திலும் புத்தொளியை உண்டாக்கியது எனலாம்.

பேராசிரியர் சி.பத்மநாதன் அவர்களினால் ஆரம்பத்தில் உலக இந்து மகாநாடு நடவடிக்கைகள் முன்னெடுத்துச் செல்லப்பட்டன. கௌரவ அமைச்சர் அவர்களினதும், அமைச்சின் செயலாளர், மேலதிகச் செயலாளர் உட்பட அனைத்து தரத்தில் அமைந்த அதிகாரிகளின் பூரண ஒத்துழைப்பும் மகாநாடு வெற்றிகரமாக அமைவுபெற்றதற்குக் காரணமாக அமைந்தன. அமைச்சு மட்டத்தில் இவர்களின் பங்களிப்பு மேலோங்கியது போல் பிராந்தியங்களில் நடைபெற்ற மகாநாடுகள், அரசாங்க அதிபர்களின் மேற்பார்வையில் நடைபெற்று அமைச்சுக்கு மெருகூட்டின.

இலண்டன், சுவீடன், இந்தியா, நேபாளம், மலேசியா, கனடா, சிங்கப்பூர் போன்ற நாடுகளிலிருந்து மகாநாட்டில் கட்டுரைகள் படிப்பதற்காக ஆய்வாளர்கள் வருகை தந்திருந்தனர். இலங்கை, அறிஞர்கள் பலரும் ஆர்வமுடன் இம் மகாநாட்டில் கலந்துகொண்டு கட்டுரைகள் படித்தனர்.

மகாநாட்டின் செயற்பாடுகளில் கௌரவ அமைச்சர் அவர்கள் கண்ணும் கருத்துமாக இருந்து செயற்பட்டார். கொழும்பு மாநகரில் ஒரேநேரத்தில் பல்துறை சார்ந்த கலை நிகழ்ச்சிகள் பல இடங்களில் நடத்தப்பட்டன. காலிமுகத்திடலில் இறுதிநாள் நிகழ்ச்சி மிகவும் கோலாகலமாக நடத்தப்பட்டது. இம் மகாநாட்டையொட்டி தபால் திணைக்களம் சிறப்பு முத்திரையொன்றையும் வெளியிட்டுவைத்தது.

மே மாதம் 2ஆந் திகதி பண்டாரநாயக்கா சர்வதேச மகாநாட்டு மண்டபத்தில் ஆரம்ப நிகழ்வு நடைபெற்றபோது அதில் மாண்புமிகு பிரதமர் அவர்கள் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு சிறப்புச் சொற்பொழிவாற்றினார். இவ்வைபவத்தில் இலங்கை அமைச்சர்கள் பலரும் வெளிநாட்டு அமைச்சர்களும் கலந்து கொண்டதுடன் ஆதீனங்களின் முதல்வர்களும் கலந்து சிறப்பித்தனர். இறுதிநாள் நிகழ்ச்சி நுவரெலியாவில் மிகவும் கோலாகலமாக நடந்தேறியது. ஐந்து நாட்கள் நடைபெற்ற உலக இந்து மகாநாட்டையொட்டி ஆங்கிலம், தமிழ் ஆகிய இரு மொழிகளிலும் சிறப்பு மலர்கள், வெளியிடப்பட்டதுடன் கலாசாரக் கண்காட்சியும் இடம்பெற்றதுடன் அவைகளைப் பிரதிபலிக்கும் ஊர்திகளும், கலாசார நிகழ்ச்சிகளும் இந்துக்கள் மனதில் இடம் பிடித்துக்கொண்டன.

இலங்கையில் உள்ள அனைத்து தரத்தில் அமைந்த ஊடகங்கள் யாவும் உலக இந்து மகாநாட்டின் செயற்பாடுகளுக்கு முக்கியத்துவம் கொடுத்து செயலாற்றியமையினால் 2ஆவது உலக இந்து மகாநாடு, இந்து சமய விவகார அலுவல்கள் அமைச்சின் செயற்றிட்டங்களில் பூரண வெற்றியைக் கொடுத்து அமைச்சின் ஏனைய செயற்பாடுகளுக்கு களம் அமைத்துக் கொடுத்தது என்றால் மிகையாகாது.

* * *

# அமைச்சின் செய்திகள்

## "பிரதமர் ரணில் தலைமையிலான ஆட்சியில் சகல இன மக்களும் சமாதான வாழ்வு"

### அமைச்சர் தி.மகேஸ்வரன் மகிழ்ச்சி

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான ஐக்கிய தேசிய முன்னணி அரசு ஆட்சிப் பொறுப்பை ஏற்ற பின்னரே சகல இன மக்களும் சமாதானத்துடன் நிம்மதியாக வாழும் சூழ்நிலை ஏற்பட்டுள்ளது.

இவ்வாறு இந்து சமய விவகார அலுவல்கள் அமைச்சர் மாண்புமிகு தி. மகேஸ்வரன் தெரணியகலை சிரிசமன் விளையாட்டு மைதானத்தில் நடைபெற்ற 222ஆவது மகாபொல கண்காட்சியின் இரண்டாம் நாள் விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு பேசுகையில் குறிப்பிட்டார்.

□இருபது வருட கால கோர யுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவந்து சமாதான வித்துக்கு அடித்தளமிட்ட பெருமை ஐக்கிய தேசிய முன்னணி அரசையே சாரும். நாட்டில் தற்பொழுது நிலவும் நிதிப் பற்றாக்குறைக்கு மத்தியிலும் எமது அரசு இந்து சமய விவகார அலுவல்கள் அமைச்சுக்குக் கூடுதல் நிதியை ஒதுக்கியுள்ளது.□ என்றும் மாண்புமிகு அமைச்சர் மகேஸ்வரன் தெரிவித்தார்.

### யாழ் குடாநாட்டில் 75நாட்களில் 750 வீடுகள் நிறுவத்திட்டம்

அமைச்சர் மகேஸ்வரன் அறிவிப்பு

யாழ் மாவட்டத்தில் 75நாட்களில் 750 வீடுகளை அமைப்பதற்கு இந்து சமய விவகார அலுவல்கள் அமைச்சர் மாண்புமிகு தியாகராஜா மகேஸ்வரன் திட்டமிட்டுள்ளார்.

யாழ் மாவட்டச் செயலகத்தில் அரச அதிபர் திரு.பத்மநாதனுடன் நடைபெற்ற கலந்துரையாடலின்போது அமைச்சர் தி.மகேஸ்வரன் இத் தகவலைத் தெரிவித்தார்.

யாழ் குடாநாட்டில் பாஷையூர், குருநகர், பொம்மை வெளி ஆகிய பகுதிகளில் 750 வீடுகள் நிறுவப்படவுள்ளன. இவ்வீடுகளை அமைப்பதற்காக தலா ஒவ்வொரு வீட்டுக்கும் ஒரு இலட்சத்து எழுபத்தையாயிரம் ரூபா செலவிடப்படும்.

இந்து சமய விவகார அலுவல்கள் அமைச்சுக்கு அரசாங்கத்தினால் ஒதுக்கப்பட்டுள்ள பன்முகப்படுத்தப்பட்ட வரவு - செலவுத் திட்ட நிதியிலிருந்தே இவ்வீடுகள் நிறுவுவதற்கான பணம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### மதமாற்றத் தடைச் சட்டம் பற்றி அமைச்சர் கருத்து

மதமாற்றத் தடைச் சட்டம் கொண்டு வருவது அனைத்து மதத்தினரையும் பாதுகாக்கும் செயற்பாடு என்று இந்து சமய விவகார அலுவல்கள் அமைச்சர் மாண்புமிகு தி.மகேஸ்வரன் கருத்துத் தெரிவித்துள்ளார்.

மதமாற்றத் தடைச் சட்டத்துக்கு இப்போது சட்டமா அதிபரின் அங்கீகாரம் கிடைத்துள்ளது. வெகுவிரைவில் இந்தச் சட்டமூலம் பாராளுமன்றத்துக்குக் கொண்டு வரப்படும் என்றும் அமைச்சர் தி.மகேஸ்வரன் கூறினார்.

### அமைச்சர் மகேஸ்வரன் முயற்சியால் சேதமடைந்த 298 வீடுகள் இலவச விநியோகம்

இந்து சமய விவகார அலுவல்கள் அமைச்சர் மாண்புமிகு தி.மகேஸ்வரனின் வேண்டுகோளை அடுத்துப் பிரதமர் மாண்புமிகு ரணில் விக்கிரமசிங்க வடக்கில் சேதமடைந்த வீடமைப்புத்திட்டத்தில் 298 வீடுகளை இலவசமாக வழங்குமாறு உத்தரவிட்டுள்ளார்.

வடக்கில் நாவற்குழி வீடமைப்புத் திட்டத்தில் பல ஆண்டுகளுக்கு முன்னர் கட்டப்பட்டுச் சேதமடைந்த நிலையில் 298 வீடுகள் உள்ளன. இவ்வீடமைப்புத் திட்டத்திலுள்ள 298 வீடுகளையும் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை விற்பதற்குத் திட்டமிட்டிருந்தது.

மேற்படி 298 வீடுகளையும் யுத்தத்தினால் பாதிப்புற்று வீடுகளை இழந்த மக்களுக்கு இலவசமாக வழங்கவேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் தி.மகேஸ்வரன் பிரதமர் மாண்புமிகு ரணில் விக்கிரமசிங்கவிடம் கடிதம் மூலம் கோரியிருந்தார்

## மலையக ஆலயங்களுக்கு நிதி, பூசைப் பொருட்கள்

தெரணியகலைப் பகுதியிலுள்ள இந்து ஆலயங்களுக்கு இந்து சமய விவகார அலுவல்கள் அமைச்சர் மாண்புமிகு தியாகராஜா மகேஸ்வரன் நன்கொடை நிதி, பூசைப் பொருட்களை வழங்கினார்.

இந் நன்கொடை நிதிக்கான காசோலைகள் வழங்கும் வைபவம் தெரணியகலை கதிரேசன் மகா வித்தியாலயத்தில் நடைபெற்றது.

"மலையகப் பகுதிகளிலுள்ள இந்து ஆலயங்கள் பின் தங்கிய நிலையில் உள்ளன. இதனையிட்டு நான் மிகவும் கவலைப்படுகின்றேன். எனது அமைச்சில் முதல் தடவையாக ஆலயங்களுக்கான பூசைப் பொருட்களைத் தமிழ் நாட்டிலிருந்து கொள்வனவு செய்து ஆலயங்களுக்கு வழங்கி வருகின்றோம். இப்பூசைப் பொருட்கள் மலையக ஆலயங்களுக்கு வழங்கப்பட்டு வருகின்றன." என்று இவ் வைபவத்தில் உரையாற்றிய மாண்புமிகு அமைச்சர் தி.மகேஸ்வரன் குறிப்பிட்டார்.

## திருவாவடுதுறை ஆதீன முதல்வரின் இலங்கை விஜயம்

திருவாவடுதுறை ஆதீனம் 23ஆவது குருமகா சந்நிதானம் சீர்வளர் சிவப்பிரகாச தேசிக பரமாச்சாரிய சுவாமிகள் கடந்த செப்டம்பர் மாதம் 22ஆந் திகதி இந்து சமய விவகார அலுவல்கள் அமைச்சின் அழைப்பையேற்று இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டார்.

இலங்கையின் வடக்கே மன்னார் மாவட்டத்தில் "மாதோட்டம்" என வரலாற்று ஆசிரியர்களால் குறிப்பிடப்படும் தேவாரப் புகழ் பெற்ற திருக்கேதீஸ்வர ஆலய மண்டலாபிஷேக நன்னீராட்டு விழாவில் அருளுரை வழங்குவதற்காகத் திருவாவடுதுறை ஆதீனம் இலங்கைக்கு வருகை தந்தார்

## கேகாலை மாவட்டத்தில் 60 கோவில்களுக்கு நிதியுதவி

கேகாலை மாவட்டத்திலுள்ள 60 இந்துக் கோவில்களுக்கு ரூபா 46 இலட்சம் நிதியும் ரூபா 6 இலட்சம் பெறுமதியான பூசை உபகரணங்களை இந்து சமய விவகார அலுவல்கள் அமைச்சர் மாண்புமிகு தி. மகேஸ்வரன் வழங்கியுள்ளார்.

மூன்றாம் நிலைக் கல்வி அமைச்சரும், கேகாலை மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினருமான கபீர் ஹாசீம் விடுத்த வேண்டுகோளைத் தொடர்ந்து மாண்புமிகு அமைச்சர் தி.மகேஸ்வரன் இப்பொருட்களைக் கையளித்துள்ளார். கேகாலை நகர மண்டபத்தில் இக்கையளிப்பு வைபவம் நிகழ்ந்தது.

## 2004 இல் யாழ் குடா முழுவதும் தொலைபேசி வசதி விஸ்தரிப்பு அமைச்சர் மகேஸ்வரன் நடவடிக்கை

இந்து சமய விவகார அலுவல்கள் அமைச்சர் மாணபுமிகு தி. மகேஸ்வரன் அவர்கள் மேற்கொண்ட முயற்சியின் பயனாக 2004ஆம் ஆண்டு யாழ் குடா நாடு முழுவதற்கும் தொலைபேசி சேவை வழங்கப்படவுள்ளது. ரெலிகொம் நிறுவனப் பிரதம நிறைவேற்றுப் பொறியியலாளர் இதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளார்.

யாழ் பிராந்திய தொலைபேசிச் சேவையை விஸ்தரிப்பது தொடர்பாக அமைச்சர் மகேஸ்வரன் தனது அமைச்சில் வைத்து ரெலிகொம் உயரதிகாரிகளுடன் கலந்துரையாடினார்.

யாழ்ப்பாணத்தில் தற்போது 150 மீற்றர் உயரமான தொலைபேசிக் கோபுரம் அமைக்கப்பட்டு வருகின்றது. 2004 ஆம் ஆண்டு மேலதிகமாகத் தொலைபேசித் தொடர்புகளை வழங்கும் வகையில் புதிய இலத்திரனியல் சாதனங்களைக் கொண்ட தொலைத் தொடர்பு நிலையம் யாழ்ப்பாணத்தில் நிறுவப்படவுள்ளது.

காரைநகர், வட்டுக்கோட்டை ஆகிய பகுதிகளில் புதிய தொலைத்தொடர்புக் கோபுரம் ஒன்று அமைப்பதற்கும் சம்மதம் தெரிவிக்கப்பட்டது. இதற்கான காணியைப் பெற்றுக்கொடுப்பதாகவும் அமைச்சர் உறுதியளித்தார்.

## சபரிமலை கன்னிச் சாமிகளுக்கு இலவச கறுப்பு வேட்டி, சால்வை

முதற் தடவையாகச் சபரிமலை யாத்திரை செல்லும் "கன்னிச் சாமிகளுக்கு" இலவசமாக கறுப்பு வேட்டி, சால்வை, விரத மணிமாலை என்பனவற்றை இந்து சமய விவகார அலுவல்கள் அமைச்சு வழங்கவுள்ளது.

இலங்கையிலிருந்து சபரிமலை புனித யாத்திரைக்கு இவ்வருடம் மூவாயிரத்திற்கு

மேற்பட்ட அடியார்கள் செல்வார்கள் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இதற்கான பூர்வாங்க ஏற்பாடுகளை இந்து சமய விவகார அலுவல்கள் அமைச்சு, இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் ஆகியன மேற்கொண்டுள்ளன.

## கதிர்காமம் இராமகிருஷ்ண மடம் மீளப்பெறப்படும்

கதிர்காமத்தில் முன்னர் இயங்கிய இராமகிருஷ்ண மிஷன் மடம் யாத்திரிகர்களின் நலன் கருதி மீண்டும் பொறுப்பேற்கப்படவுள்ளது.

இந்து சமய விவகார அலுவல்கள் அமைச்சர் மாண்புமிகு தியாகராஜா மகேஸ்வரன் இதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளார்.

இதுசம்பந்தமாக மாண்புமிகு அமைச்சர் மகேஸ்வரன், பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுடன் பேச்சுவார்த்தை நடத்தியிருந்தார்.

## வடபகுதி யாத்திரிகர்களுக்கு அநுராதபுரத்தில் மண்டபம்

தென்பகுதியிலிருந்து வடபகுதிக்குச் செல்லும் இந்து யாத்திரிகர்கள் தங்கிச் செல்வதற்கென அநுராதபுரத்தில் இந்து யாத்திரிகர்கள் மண்டபம் ஒன்று நிறுவப்படவுள்ளது. இம்மண்டபத்திற்கென 50 இலட்சம் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அடுத்த அண்டு இந்த மண்டபம் திறந்துவைக்கப்படும்.

இந்து சமய விவகார அலுவல்கள் அமைச்சர் மாண்புமிகு தி. மகேஸ்வரன் இத்தகவலைத் தெரிவித்தார். இதுவரைகாலமும் தெற்கிலிருந்து யாழ் குடாநாட்டிற்குச் செல்லும் யாத்திரிகர்கள் தங்குமிடம் இல்லாது அவதியுற்று வருகிறார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

## களுத்துறை மாவட்ட கோவில்களுக்கு ரூபா 525,000 நிதியுதவி

மக்கள் தொடர்பாடல் அமைச்சர் மாண்புமிகு இம்தியாஸ் பாக்கீர் மார்க்காரின் வேண்டுகோளுக்கிணங்க களுத்துறை மாவட்டத்திலுள்ள இந்து ஆலயங்களின் புனரமைப்பிற்கென இந்து சமய விவகார அலுவல்கள் அமைச்சர் மாண்புமிகு தி. மகேஸ்வரன் அவர்கள் 525,000 ரூபாவை நிதியுதவியாக வழங்கியுள்ளார்.

களுத்துறை மாவட்டத்தில் அகலவத்த, பதுறுஓயா, புலத்சிங்கள ஆகிய பிரதேசங்களில் உள்ள 23 ஆலயங்களுக்கு இந் நிதியுதவிக்கான காசோலைகள் வழங்கப்பட்டன.

## நித்திய பூசைக்கு பால் வழங்கப் பசுக்கள்

சைவ ஆலயங்களில் நித்திய பூசைக்கான பாலைப் பெற்றுக்கொள்ளவும் சுயதொழில் முயற்சி ஊக்குவிப்புக்காகவும் 30 இலட்சம் ரூபா பெறுமதியான பசு மாடுகள் யாழ் மாவட்டத்தில் வழங்கப்பட்டுள்ளன.

இந்து சமய விவகார அலுவல்கள் அமைச்சர் தியாகராஜா மகேஸ்வரன் இப் பசு மாடுகளைக் கையளித்துள்ளார். ஆலயங்களின் நித்திய பூசைகளில் தட்டுப்பாடின்றி பால் கிடைக்கவேண்டும் என்பதற்காக அமைச்சர் இந்நடவடிக்கையை மேற்கொண்டுள்ளார்.

## அறநெறிப் பாடசாலைகள்

இந்து சமய நிறுவனங்கள், இந்து ஆலயப் பரிபாலனசபைகள் என்பன நடத்தும் அறநெறிப்பாடசாலைகள், இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளன. இவற்றிற் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு வருடந்தோறும் மாவட்ட ரீதியாக பயிற்சிக் கருத்தரங்குகள் திணைக்களத்தின் மூலம் நடத்தப்படுகின்றன. அத்துடன் மாணவர்களுக்கான உசாத்துணை நூல்களும் வழங்கப்படுகின்றன. பதினொராம் ஆண்டு கற்கும் மாணவர்களுக்காக அறநெறி இறுதிப் பரீட்சையொன்றை பரீட்சைத் திணைக்களம் நடத்துகின்றது.

இந்த ஆண்டு பதுளை, மட்டக்களப்பு, யாழ்ப்பாணம், களுத்துறை, திருகோணமலை, கொழும்பு. அம்பாறை, கேகாலை, புத்தளம், இரத்தினபுரி, மன்னார், வவுனியா, நுவரெலியா, கண்டி, மாத்தளை ஆகிய மாவட்டங்களில் ஆசிரியர்களுக்கான கருத்தரங்குகள் நடைபெற்றமை குறிப்பிடத்தக்கதாகும். சிறப்பாக இயங்கும் அறநெறிப் பாடசாலைகளுக்கு இசைக்கருவிகள் வழங்கப்பட்டுள்ளன. அதுபோன்றே அறநெறிப்பாடசாலை இறுதிப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கான உசாத்துணை நூல்களும் வழங்கப்பட்டுள்ளன.

## திணைக்கள நூல்கள்

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் மூலம் கிடைத்தற்கரிய நூல்களும் அறநெறிப் பாடசாலைகளுக்கான துணை நூல்களும் வருடந்தோறும் அச்சிடப்படுகின்றன.

கிடைத்தற்கரிய நூல்கள் வரிசையில் "பாரத அம்மானை" எனும் நூல் பதிப்பிக்கப்பட்டுள்ளது. இது மட்டக்களப்பு பிரதேசத்தில் ஏட்டு வடிவிலிருந்த மகாபாரதக் கதையாகும்.

திணைக்கள ஆய்வுப் பகுதியின் தொகுப்பு நூல்களாக "இந்து கலாசாரம் - நடனங்களும், ஓவியங்களும்" "இந்து கலாசாரம், கோயில்களும், சிற்பங்களும்" ஆகிய இரு நூல்கள் வெளியிடப்பட்டுள்ளன. இவை இரண்டாயிரம் ஆண்டு திணைக்களம் நடத்திய ஆய்வரங்கக் கட்டுரைகளின் தொகுப்புகளாகும்.

அறநெறிப் பாடசாலை மாணவர்களுக்கென சைவசித்தாந்தக் கருத்துக்கள் அடங்கிய 'சைவபோதம்' எனும் நூல் வெளியிடப்பட்டுள்ளது.

இந்துக் கலைக்களஞ்சியத்தின் ஆறாவது தொகுதி இம் மாத இறுதிக்குள் வெளியிடப்படவுள்ளது. ஏழாம் தொகுதிக்குரிய கட்டுரைகள் தொகுக்கப்படுகின்றன.

அறநெறிப் பாடசாலை மாணவர்களுக்கென 'அறநெறிச் சிந்தனைகள்' எனும் நூல் அச்சிடப்பட்டு வருகின்றது. இது வாரியார் சுவாமிகளின் பொன் மொழிகளையும் நீதிக் கதைகளையும் உள்ளடக்கியதாகும். இவற்றுடன் சிலப்பதிகாரம் - பண்பர்டுக் கோலங்கள், காசிவாசி செந்திநாதையரின் சிவஞானபோதம் - வசனாலங்கார தீபம் ஆகியனவும் விரைவில் வெளியிடப்படவுள்ளன.

## கதிர்காம இந்து யாத்திரிகர் விடுதி

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் நிர்வாகத்தின் கீழ் கதிர்காமத்தில் இந்து யாத்திரிகர் விடுதி ஒன்று நிர்வகிக்கப்படுகிறது. இவ் விடுதியில் 20 அறைகளும் 8 மண்டபங்களும் உள்ளன. கதிர்காமம் செல்லும் யாத்திரிகர்கள் அறைகள், மண்டபங்கள் என்பனவற்றைத் திணைக்களத்திலோ அல்லது கதிர்காம விடுதியிலோ உரிய கட்டணத்தைச் செலுத்தி ஒதுக்கீடு செய்து கொள்ளலாம்.

## நாவலர் மணி மண்டபம்

யாழ்ப்பாணம் நல்லூர் கந்தசுவாமி கோவில் முன்றலில் அமைந்துள்ள நாவலர் மணி மண்டபத்தில் யாழ்ப்பாணம் மாவட்டச் செயலகத்தில் இயங்கும் இந்து சமய விவகார அலுவல்கள் அமைச்சின் பிராந்திய அலுவலகம் மூலமாக சமயச் சொற்பொழிவுகள், கருத்தரங்குகள், பண்ணிசை வகுப்புகள், யோகாசன தியான வகுப்புகள் என்பன நடத்தப்படுகின்றன.

## நாவற்குடா இந்து கலாசார நிலையம்

இந்து சமய கலாசார திணைக்கள நிர்வாகத்தின் கீழ் மட்டக்களப்பு நாவற்குடாவில் இந்து கலாசார நிலையமொன்று இயங்குகின்றது. இந்நிலையத்தில் ஆன்மீகச் சொற்பொழிவுகள், கருத்தரங்குகள், கலந்துரையாடல்கள் என்பன மேற்கொள்ளப்படுகின்றன.

## ஆலயங்களுக்கான நிதியுதவி

2003ஆம் ஆண்டு ஆலய நிர்வாக சபைகள், பரிபாலன சபைகள் என்பவை விடுத்த வேண்டுகோளுக்கிணங்க இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் மாவட்ட ரீதியில் ஆலயங்களுக்கு நிதியுதவி வழங்கியுள்ளது. கண்டி, களுத்துறை, புத்தளம், கேகாலை, பதுளை ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த ஆலயங்கள் நிதியுதவியைப் பெற்றுள்ளன. அவ்வாறே இந்து நிறுவனங்களும், இந்து அநாதைச் சிறுவர் இல்லங்களும் இவ்வாண்டு நிதியுதவி பெற்றுள்ளன.

## சித்திரைப் புத்தாண்டையொட்டி கட்டுரைப் போட்டி

இந்து சமய விவகார அலுவல்கள் அமைச்சு, இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் என்பன எக்ஸ்பிரஸ் நியூஸ் பேப்பர் நிறுவனத்துடன் இணைந்து இவ்வாண்டு சித்திரைப் புதுவருடத்தையொட்டிப் பாடசாலை மாணவர்களுக்கிடையிலான கட்டுரைப் போட்டியொன்றை அறிமுகம் செய்திருந்தன.

இப்போட்டிக்கு 396 மாணவர்கள் கட்டுரைகளை அனுப்பியிருந்தனர். இவற்றுள் சிறந்த முதல் பத்துக் கட்டுரைகள் தெரிவுசெய்யப்பட்டன. முதல் ஐந்து கட்டுரைகளுக்கு முறையே ரூபா 10,000, ரூபா 7,500, ரூபா 5,000, ரூபா 2,500, ரூபா 2,500 என பணப்பரிசும் ஏனைய ஐந்து கட்டுரைகளுக்குச் சான்றிதழ்களும் வழங்கப்பட்டன. இந்நிகழ்ச்சி தொடர்பான வைபவம் 2003.09.20ஆந் திகதி கொழும்பு இராமகிருஷ்ண மிஷன் மண்டபத்தில் நடைபெற்றபோது கௌரவ அமைச்சர் தி.மகேஸ்வரன் அவர்கள் கலந்துகொண்டு பரிசுகளையும், சான்றிதழ்களையும் வழங்கினார். எக்ஸ்பிரஸ் நியூஸ் பேப்பர் நிறுவனத்தின் வீரகேசரி ஞாயிறு இதழாசிரியர் திரு.வி. தேவராஜ் அவர்களும் கலந்துகொண்டார். அன்றையதினம் பிரபல ஆன்மீக சொற்பொழிவாளர் திரு.ஆறு திருமுருகன் அவர்களின் சிறப்புச் சொற்பொழிவும் இடம்பெற்றது.

## பண்பாடு - கோபுரம்

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் பருவ இதழாக 'பண்பாடு' என்னும் இதழ், காலாண்டுக்கொருமுறை வெளியிடப்படுகின்றது. இவ்விதழில் அறிஞர்களின் ஆய்வுக்கட்டுரைகள் இடம்பெறுகின்றன.

திணைக்களத் தகவல் இதழான 'கோபுரம்' திணைக்களச் செய்திகளையும் ஆன்மீகக் கட்டுரைகளையும் உள்ளடக்கியதாக வெளியிடப்படுகின்றது.

## இந்துப் பேருரைகள்

இலங்கைக்கு வருகை தருகின்ற இந்திய மற்றும் நாடுகளைச் சேர்ந்த இந்து சமய அறிஞர்கள், இலங்கை அறிஞர்கள் என்போரைக்கொண்டு திணைக்களத்தின் மூலமாகத் தொடர்ச்சியாக இந்து சமயப் பேருரைகள் நிகழ்த்தப்படுகின்றன. இவை கொழும்பிலும் ஏனைய மாவட்ட நகரங்களிலும் இடம்பெறுகின்றன.

## பனம் பழத்திலிருந்து நோய் எதிர்ப்பு "அன்ரிபயரிக்" மருந்து தயாரிப்பு

பெரும்பான்மைச் சமூக மாணவர்கள் பனை வளம் பற்றிய ஆய்வுகளில் ஈடுபடத் தொடங்கியுள்ளனர். ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழக இரசாயனத் துறைத் தலைவர் பேராசிரியர் ஜான்ஸ் இந்த ஆய்வுகளை மேற்கொண்டுள்ளார்.

பனை அபிவிருத்திச் சபையினால் பேராசிரியர் ஏ.ஈ.ஜான்சுக்கு அளிக்கப்பட்ட பாராட்டு வைபவத்திற்கு தலைமை வகித்துப் பேசுகையில் சபையின் பொது முகாமையாளர் சோ.கோகுலதாசன் இத் தகவலைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது -

"ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தில் பனை வளம் பற்றி மேற்கொள்ளப்படும் ஆய்வுகள் எதிர்காலத்தில் பல உண்மைகளைத் தெளிவுபடுத்துவதுடன், பனை வளம் பற்றிய புதிய தகவல்களையும் வெளிக்கொண்டுவர உதவும். பேராசிரியர் ஜான்ஸ் பனை வள ஆராய்ச்சியில் மூன்று தசாப்தங்களாக ஈடுபட்டு பனம் பழத்தில் பெறுமதிமிக்க இரசாயனப் பதார்த்தம் இருப்பதாக ஆய்வுகள் மூலம் நிரூபித்துள்ளார்.

இந்த இரசாயனப் பதார்த்தம் மூலம் நோய் எதிர்ப்பு சக்தியான "அன்ரிபயரிக்" மருந்துகளைத் தயாரிக்கமுடியும் என்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. சர்வதேச மருந்து உற்பத்தி நிறுவனங்களும் இதுசம்பந்தமாக பனை அபிவிருத்திச் சபையுடன் ஆலோசனை செய்து வருகின்றன."

## காறல் தன்மையை அகற்ற புதிய கண்டுபிடிப்பு

ஒடியல் மாவிலுள்ள 'காறல்' தன்மையை அகற்றுவதற்கான ஆய்வுகளில் பனை அபிவிருத்திச் சபை ஈடுபட்டு வருகின்றது.

பனம் ஒடியல் மாவிலுள்ள 'காறல்' தன்மையை அகற்றுவதற்கான மருத்துவ ரீதியான ஆய்வுகளை ஸ்ரீ ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகம், பேராதனை மருத்துவ பீடம், மருத்துவ ஆராய்ச்சி நிலையம் ஆகியன மேற்கொண்டிருந்தன.

தற்போது இதுசம்பந்தமான ஆய்வுகளின் முடிவுகள் வெளியிடப்பட்டுள்ளன. ஒடியல் மாவை 45 நிமிடங்களுக்கு ஆகக் குறைந்தது 80 பாகை சென்ரி கிரேட் வெப்பநிலையில் வறுப்பதன் மூலம் 'காறல்' தன்மையை முற்றாக அகற்றமுடியும். இச் செயல் முறை சாதாரண பாவனைக்கு இலகுவானதாகக் கண்டறியப்பட்டுள்ளது

## பனம் உற்பத்திகள் யப்பானுக்கும் ஏற்றுமதி

"யாழ் குடாநாட்டில் பெருமளவு குடும்பங்கள் பனை அபிவிருத்திச் சபையை நம்பி வாழுகின்றன. இக்குடும்பங்களின் மேம்பாட்டுக்காக எவ்வளவோ செய்யமுடியும். எனினும் திட்டமிடலுக்கு ஏற்றவாறு அரச ஊக்குவிப்புக்கள் ஏதுமற்ற நிலையில் குறித்த இலக்கை அடையமுடியாமல் உள்ளது."

இவ்வாறு பனை அபிவிருத்திச் சபைத் தலைவர் திரு.பொ.சிவபாதம் கூறினார். பனை அபிவிருத்திச் சபையின் 25ஆண்டு நினைவு வெள்ளி விழாவையொட்டி யாழ்ப்பாணத்தில் நடத்திய பத்திரிகையாளர் மாநாட்டில் அவர் இத்னைத் தெரிவித்தார்.

"பனை அபிவிருத்திச் சபையின் அபிவிருத்திப் பணிகள் பின்னடைவைச் சந்திப்பதற்கு தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர்களே காரணம். அவர்கள் தமது நிதியொதுக்கீடுகளை வழங்கியுதவ முன்வரவேண்டும்" என்றும் பனை அபிவிருத்திச் சபைத் தலைவர் கேட்டுக் கொண்டார்.

பனை அபிவிருத்திச் சபை தமிழ் மக்களின் பொருளாதாரத்தை இலக்காகக் கொண்டே உருவாக்கப்பட்டது. இன்று எமது உற்பத்திகளை யப்பான் போன்ற உயர் தொழில்நுட்ப வலிமைமிக்க வல்லரசுகளுக்குக் கூட அனுப்பக்கூடிய நிலை உருவாகியுள்ளது என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

## பனை அபிவிருத்திச் சபையின் வெள்ளி விழா நிகழ்வுகள்

பனை அபிவிருத்திச் சபை உருவாக்கப்பட்டு 25ஆண்டுகள் நிறைவையொட்டி வெள்ளி விழா கோலாகலமாக கொண்டாடப்படவுள்ளது. நாடளாவிய ரீதியில் வெள்ளிவிழாக் கொண்டாட்டங்கள் இடம்பெறவுள்ளன.

பனை அபிவிருத்திச் சபைத் தலைவர் திரு.பொ.சிவபாதம் வெள்ளிவிழாக் கொண்டாட்டம் தொடர்பான ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளார். இவ்விழாவின் முதற் கட்டமாகப் பனை வள ஆராய்ச்சிக் கருத்தரங்கும், செயலமர்வும் பொறளையிலுள்ள மருத்துவ ஆராய்சசி நிலையத்தில் 2003.10.15ஆந் திகதி முழுநாள் நிகழ்வாக நடத்தப்பட்டது

இவ்வாராய்ச்சிக் கருத்தரங்கில் இலங்கையில் உள்ள பல்கலைக் கழகங்களைச் சேர்ந்த பேராசிரியர்கள், ஆய்வாளர்கள், உயரதிகாரிகள் பலரும் கலந்துகொண்டனர். பனம் பொருட்களிலிருந்து தயாரிக்கக்கூடிய புதிய உணவு வகைகள் தொடர்பான ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன.

பனம் பழத்திலிருந்து உற்பத்தி செய்யப்படக்கூடிய நோய்த்தடுப்பு மருந்து தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட ஆய்வு அறிக்கையும் சமர்ப்பிக்கப்பட்டது.

பனை அபிவிருத்திச் சபை வெள்ளிவிழாப் போட்டிகளும் நடத்தப்படவுள்ளன. "கற்பகதரு" என்னும் தலைப்பில் தேசிய ரீதியில் பாடசாலைகளுக்கிடையேயான கட்டுரைப் போட்டி நடத்தப்படுகின்றது.

பனைவளம் சம்பந்தமான கைப்பணிப் பொருள் உற்பத்திப் போட்டிகளும் அறிவிக்கப்பட்டுள்ளன. இதில் வெற்றிபெறும் சிறந்த பனம் கைப்பணிப் பொருட்களுக்குப் பரிசுகள் வழங்கப்படும். பனம் கைப்பணிப் பொருட்காட்சி ஒன்றும் யாழ்ப்பாணத்தில் இடம்பெறவுள்ளது.

## வடக்கில் பனம் வெல்லம் உற்பத்தி அதிகரிப்பு

பனம் வெல்ல உற்பத்தியை அதிகரிப்பதற்கான துரித நடவடிக்கைகளைப் பனை அபிவிருத்திச் சபை மேற்கொண்டுள்ளது. தற்போது நாடளாவிய ரீதியில் பனம் வெல்லத்துக்கு அதிக கிராக்கி ஏற்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

வரணி, காரைநகர், ஊர்காவற்றுறை உட்பட நான்கு இடங்களில் முதற்கட்டமாகப் பனம் வெல்ல உற்பத்தி நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. பனம் வெல்ல உற்பத்திக்குத் தேவையான பதநீரை வழங்குவதற்கு அந்தந்தப் பகுதிகளில் உள்ள பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்கள் முன்வந்துள்ளன.

பனம் வெல்லம் சீனிக்குப் பதிலாகப் பிரதியீட்டுப் பொருளாகவும், நீரிழிவு நோயாளிகளுக்கு ஏற்ற மருத்துவப் பொருளாகவும் பயன்படுகின்றது.

## காரைநகரில் படகுத் துறை

காரைநகரில் படகு கட்டும் துறை புனரமைப்புச் செய்யப்படவுள்ளது. வடகடல் நிறுவனம் இதுசம்பந்தமான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

இப்படகு கட்டும் துறையில் குறைந்த செலவிலான படகுகள் தயாரிக்கப்படவுள்ளன.

குருநகரில் சேதமடைந்திருக்கும் ஐஸ் தொழிற்சாலையைத் திருத்திப் புனரமைப்பதற்கான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அத்துடன் மீன்பிடிக் கிராமங்களில் மீனவர்களின் மீன்களைப் பாதுகாப்பதற்கான குளிரூட்டி அறைகளும் நிறுவப்படவுள்ளன.

இந்து சமய விவகார அலுவல்கள் அமைச்சர் மாண்புமிகு தி. மகேஸ்வரன் இவற்றிற்கான நிதியொதுக்கீடுகளை வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொண்டுள்ளார்.

## வன்னிப் பகுதியிலும் வடகடல் உற்பத்திகள்

வடகடல் நிறுவனம் தனது விற்பனை நடவடிக்கைகளை வன்னிப் பகுதிகளுக்கும் விஸ்தரிப்புச் செய்துள்ளது.

இதனையடுத்து நிறுவனத்தின் எதிர்காலச் சந்தை வாய்ப்புக்கள் அதிகரித்துள்ளன எனத் தெரிவிக்கப்பட்டது. நூல் திரிக்கும் பகுதி புனரமைப்புச் செய்யப்படுவதன் மூலம் வலைகளை மிகவும் குறைந்த விலையில் உற்பத்தி செய்து விற்பனை செய்யக்கூடியதாகவிருக்கும்.

இதேவேளை நிறுவனத்தின் துரித உற்பத்திக்காக ஒரு மில்லியன் ரூபா பெறுமதியுள்ள மூலப்பொருட்கள் கொள்வனவு செய்யப்பட்டுள்ளன.

## நூல் உற்பத்தித் தொழிற்சாலை நிறுவ நடவடிக்கை

மீன்பிடிவலைகள் தயாரிப்பதற்கான நூல் திரிக்கும் தொழிற்சாலை விஸ்தரிப்புச் செய்யப்படவுள்ளது. வடகடல் நிறுவனம் இதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

நூல் திரிக்கும் தொழிற்சாலையிலுள்ள நூல் உற்பத்தி செய்யும் பகுதி நிர்மாணம் செய்யப்படவுள்ளது. இதன்மூலம் மாதம் தோறும் 5000 கிலோ நூல் உற்பத்தி செய்யப்படமுடியும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

இப் புதிய தொழிற்சாலைக் கட்டிடம் அமைப்பது சம்பந்தமான அறிக்கைகள் இந்து சமய விவகார அலுவல்கள் அமைச்சு, திறைசேரி ஆகியனவற்றில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

## வலைகள் விற்பனையால் 2.5 மில்லியன் ரூபா

வடகடல் நிறுவனம் கடந்த ஒன்பது மாதகாலப் பகுதியில் நைலோன் வலைகள் விற்பனையால் 2.5 மில்லியன் ரூபாவைச் சம்பாதித்துள்ளது.

இக்காலப் பகுதியில் 2.4 மெட்றிக் தொன் நைலோன் வலைகள் உற்பத்தி செய்யப்பட்டன. இதேவேளை ஒரு மில்லியன் ரூபா பெறுமதியான நைலோன் வலைகள் சந்தைப்படுத்தலுக்குத் தயாராகவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## வலை உற்பத்தியில் வடகடல் நிறுவனம்

'நோர்த் சீ' என அழைக்கப்படும வடகடல் நிறுவனம் தற்போது இந்து சமய விவகார அலுவல்கள் அமைச்சின் கீழ் இயங்கிவருகின்றது. இதன் அலுவலகம் பம்பலப்பிட்டியிலுள்ள பனை அபிவிருத்திச் சபை 'கற்பகம்' கட்டிடத்தில் அமைந்துள்ளது.

வடகடல் நிறுவனம் மாதாந்தம் 5மெட்ரிக் தொன் நைலோன் மீன்பிடி வலைகளை உற்பத்தி செய்யத் திட்டமிட்டுள்ளது. இதற்காக இரு நவீன வலை பின்னும் இயந்திரங்களைக் கொள்வனவு செய்யவுள்ளது.

# இந்துப் பண்பாட்டு நிதியம்

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் கீழ் இயங்கிடும் இந்நிதியம் இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் பாராளுமன்றத்தினால் 1985ஆம் ஆண்டு, 31ஆம் இலக்கச் சட்டத்தின் கீழ்ச் சட்டமாக்கப்பட்டதாகும். இந்நிதியத்தின் உறுப்பினர்கள், கௌரவ அமைச்சர் அவர்களினாலேயே நியமிக்கப்படுவர். இந்நிதியத்தில் ஏழு உறுப்பினர்கள் இடம்பெறுவார்கள். இந்நிதியம் குறிக்கப்பட்ட சட்டத்திற்கமையப் பின்வரும் குறிக்கோளைக் கொண்டதாக அமைவுபெறும்.

அ. இந்துக் கோவில்களுக்கும், மற்றைய இந்து சமய நிறுவனங்களுக்கும் அல்லது கழகங்களுக்கும், அவற்றின் சமய பண்பாட்டு, கல்வி நடைமுறைகளை மேம்படுத்துவதற்கு நிதியுதவிக்கும், ஏனைய உதவிகளுக்கும் ஏற்பாடு செய்தலும்.

ஆ. ஏதேனும் இந்துக் கோவிலின் அல்லது அத்தகைய கோவிலைச் சார்ந்த ஏதேனும் ஆதனத்தின் நிர்மாணத்திற்காக, பழுதுபார்ப்புக்காக புனருத்தாரணத்திற்காக அல்லது அபிவிருத்திக்காக நிதியுதவிக்கும் ஏனைய உதவிக்கும் ஏற்பாடு செய்தலும்.

இ. இந்து சமய ஆக்கங்களை வெளியிடுதலும் மொழி பெயர்த்தலும் உட்பட, இந்து சமயத்துடன் தொடர்பான கற்கைகள், ஆராய்ச்சிகள் என்பனவற்றிற்கும் நிதியுதவிக்கும், ஏனைய உதவிகளுக்கும் ஏற்பாடு செய்தலும், அத்தகைய கற்கைக்காகவும் ஆராய்ச்சிக்காகவும், வெளியீட்டுக்காகவும், மொழிபெயர்ப்புக்காகவும் நிறுவனங்களைத் தாபித்தலும், மேம்படுத்தலும், அபிவிருத்தி செய்தலும்

ஈ. சபையின் அபிப்பிராயத்தின்படி, இந்து சமயப் பொதுமக்களுக்கு நலன் பயப்பதாக அல்லது விருப்புடையதாகவுள்ள வேறேதேனும் மத அல்லது பண்பாட்டு நோக்கத்தினை மேம்படுத்துவதற்கு உதவி செய்தல்

மேற்குறித்த நோக்கங்களை நிறைவேற்றும் நோக்குடன் இந்துப் பண்பாட்டு நிதியத்தின் செயற்பாடுகள் அமைந்துள்ளன. இந் நிதியத்தை வலுப்படுத்தும் நோக்குடன் கொடையாளர்களிடமிருந்தும், ஆதரவாளர்களிடமிருந்தும் நன்கொடைகள் அளிக்க விரும்புவோர் நிதியத்தின் வங்கிக் கணக்கான இலங்கை வங்கி, பம்பலப்பிட்டி, மிலாகிரிய கிளை 005930801307 என்ற இலக்கத்திற்கு நிதியை வைப்புச் செய்யுமாறு வேண்டப்படுகின்றனர்.

## இந்துப் பண்பாட்டு நிதியம் – ஆளுநர் சபை

1985, 31ஆம் இலக்க இந்துப் பண்பாட்டு நிதியச் சட்ட மூலத்தின் 3 பிரிவிற்கமைய தமக்களிக்கப்பட்ட அதிகாரத்திற்கமைய இந்து சமய விவகார அலுவல்கள் அமைச்சரும், யாழ் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான கௌரவ தியாகராஜா மகேஸ்வரன் அவர்கள் பின்வரும் உறுப்பினர்களை இந்துப் பண்பாட்டு நிதியத்தின் ஆளுநர் சபைக்கு நியமனம் செய்துள்ளார்.

### தவிசாளர்

01. திரு.கந்தையா பரமேஸ்வரன் (இ.நி.சே.1)
செயலாளர்
இந்து சமய விவகார அலுவல்கள் அமைச்சு

### ஆளுநர் சபை உறுப்பினர்கள்

02. திரு.தேவமனோவரன் சுவாமிநாதன் (சட்டத்தரணி)
தலைவர், தேசிய சேமிப்பு வங்கி

03. திரு.பொன்னுத்துரை வல்லிபுரம் (ஜே.பி)

ஓய்வு பெற்ற சுங்க அதிகாரி
அறங்காவலர், ஸ்ரீ மயூராபதி ஆலயம்

04. திரு.சின்னத்துரை தனபாலா (ஜே.பி)
இயக்குநர், லீலா குரூப் நிறுவனங்கள்
உதவித் தலைவர், அகில இலங்கை இந்து மாமன்றம்

05. திரு.வைத்திலிங்கம் சிவராஜா
இயக்குநர், சிவா ரேடிங் கம்பனி

06. திரு.ஜ.ரி.சம்பந்தன்
மாண்புமிகு இந்து சமய விவகார அமைச்சரின் இணைப்புச் செயலாளர்

07. திரு.க.பரமலிங்கம் (இ.நி.சே. 1)
மேலதிகச் செயலாளர்,
இந்து சமய விவகார அலுவல்கள் அமைச்சு

08. திருமதி சாந்தி நாவுக்கரசன்
பணிப்பாளர்,
இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம்.

மேற்படி சபை 2002.10.06ஆந் திகதியிலிருந்து இயங்கத் தொடங்கியுள்ளது. இந்துப் பண்பாட்டு நிதியத்தின் முகவரியும் தொலைபேசி இலக்கமும் கீழ்வருமாறு:

தவிசாளர்,
இந்துப் பண்பாட்டு நிதியம்,
இந்து சமய விவகார அலுவல்கள் அமைச்சு,
248 1/1, காலி வீதி,
கொழும்பு04

தொ.இல. 2554804, 2552641, 2552643
தொ.நகல் 2554805, 2552825
மின்னஞ்சல் param@hinduministry.lk
santhy@hinduministry.lk
இணையத்தளம் www.hinduministry.lk]

* * * * * * * *

2003 ஆம் ஆண்டு தீபாவளிப் பண்டிகையை முன்னிட்டு
தபால் திணைக்களம் வெளியிட்ட சிறப்பு முத்திரை



தீபாவளி நல்வாழ்த்துக்கள்

24.10.2003




இந்து சமய விவகார அலுவல்கள் அமைச்சு